தனிப்பிரதி விலை அணா 0—1—6.

Reg. No. M. 3066. 1937-பிப்ரவரி 1.

PAHUTHARIVU ("REASON")

மலர் 2. இதழ் 10.



பகுத்தறிவு.

பல அறிஞர்களின் அறிவியல் ஆராய்ச்சிகள், விஞ்ஞான விளக்கம், பெண்கள் முன்னேற்றம், உடற் பயிற்சி, சுகாதாரம், வைத்தியம், பாட்டுகள், நாடகங்கள், ஹாஸ்யங்கள், உலக விநோதங்கள், சிறு கதைகளும் நிறைந்து விளங்குவது

வருட சந்தா

உள் நாடு ரூ. 1—0—0.	வெளிநாடு ரூ. 1—8—0.
தனிப்பிரதி 0—1—6.	தனிப்பிரதி 0—2—6.

சந்தாதாரர்களுக்கு

"பகுத்தறிவு"க்கு எந்த மாதத்தில் சந்தாதாரர்களாகச் சேர்ந்தாலும் வருட ஆரம்பமாகிய மே மாதம் முதலிலிருந்து பத்திரிகைகள் அனுப்பப்படும். கொஞ்சம் பிரதிகளே கையிருப்பதால் எல்லோரும் முந்திக்கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

"பகுத்தறிவு" சந்தாதாரர்களுக்கு முதல் வருடமைண்டு வால்யூம் (12 பிரதிகள் சேர்ந்தது) ஒரு ரூபாய்க்குக் கொடுக்கப்படும். தபால் சார்ஜ்வேறு. சொற்பக் காப்பிகளே இருப்பதால் உடனே ஆர்டர் கொடுங்கள்.

புதிதாகச் சந்தா சேருபவர்கள் சந்தாத் தொகையை முன்னதாகச் செலுத்திவிடவேண்டும்.

சந்தாதார் பத்திரிகை சம்பந்தமாய்க் கடிதம் எழுதும் போது சந்தா நம்பரைக் குறிப்பிட வேண்டும்.

விஷய அட்டவணை பக்கம்.

எங்காளோ? (பாட்டு) (டி. பெருமாள்சாமி)	1
சீர்திருத்த மார்க்கம் (இங்கர்சால்)	3
சமயப்பித்து	12
காளியின் வஞ்சம் (கதை) ('ஏயிஸ்')	17
கொள்கை வேண்டாமா? (தி. வே. அ.)	25
பிள்ளை பெறுவது கடவுளாலா? (பாரதிதாஸன்)	30
சாமி விளையாட்டு	33
சாமியும், சமயமும், சமபாச்சாரியார்களும் (ஈ வெ. ரா)	37
பேய், பிசாசு என்பதுண்டா?	46
பார்ப்பனரல்லாதவர்களுக்குச் சடங்குகளுண்டா? (எ. மாணிக்கம்)	48
சாமி விவேகானந்தரும் வைதீகப் பண்டிதர்களும் (கைவல்யம்)	53
சிரார்த்தம் செய்வதால் இறந்தவர்கள் மோக்ஷமடைவார்களா? (ஸ்ரீதரசுவாமிபார்)	58

பகுத்தறிவு.

அறிவை வளர்க்கும் ஓர் மாத வெளியீடு.

——(○)——

அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார்
என் உடையரேனும் இலர். (குறள்.)

மலர் 2. | ஈரோடு 1937. பிப்ரவரி 1. | இதழ் 10.

எந்நாளோ?

(தோம்பக்குளம் டி. பெருமாள்சாமி)

(1) ஆத்திகம் தானொழிந்து அல்லல்கள் பல நீங்கி
காத்திகம் தான் பெருகி கலம் பெறுவ தெந்நாளே?

(2) புராண மிதிகாசம் பூர்வீக ராமாயணம்
பாராயண மொழியப் பார்ப்பதுவு மெந்நாளோ?

(3) ஆத்திகப் பார்ப்பனீயம் ஜாதீக மதவெறிகள்
சாத்திரக் குப்பையுடன் சாவதுவும் எந்நாளோ?

(4) பெண்களின் தளை நீங்கிப்பேதமை யகன்றொழிந்து
சொந்தமதாய் வாழ்ந்து சுகம் பெறுவதெந்நாளோ?

(5) சாதிமத பேதமற்றுச் சகலரும் ஒன்றென்று
நீதியாய் நாம் வாழும் நேர்மையும் எந்நாளோ?

(6) சூத்திரன் என்றழைக்கும் சூனியப் பார்ப்பனரை
ஆத்திரங் கொண்டு அடிப்பதும் எந்நாளோ?
(இந்நாளே!)

(7) தேரும் திருநாளும் திதிமூடச் சடங்குகளும்
பேருமில்லா தொழிந்து நாம் பெயரெடுப்பதெந்
[நாளோ?

(8) குழந்தைகள் மணம்நீங்கி கோதையர் கீர்த்தி பெற்று
வளமுற மகிழ்ச்சி யுற்று வாழும் நாளெந்நாளோ?

(9) வஞ்சகப் பார்ப்பனரின் வன் கொடுமை தான் நீங்கி
பஞ்மரின் துயர் நீரும் பக்குவ நாளெந்நாளோ?

(10) பதியே தெய்வமெனப் பாவையரைத் தான் கெடுத்து
சதி செய்த பார்ப்பனியம் சாவதுவும் எந்நாளோ?

(11) மந்திரமுச் சாடனமும் மாயங்கள் தான் விளைக்கும்
தந்திரச் சண்டாளரும் தானொழிவதெந்நாளோ?

இந்தியாவில் பேசப்படும் முக்கிய பாஷைகளும், அப்பாஷை பேசும் மக்களின் எண்ணிக்கையும்.

பாஷை.	பேசுவோர் எண்ணிக்கை.	பாஷை.	பேசுவோர் எண்ணிக்கை
பங்காளி	535 லக்ஷம்	குஜராத்தி	100 லக்ஷம்
அஸ்ஸாமி	20 ,,	பஞ்சாப்	159 ,,
மராத்தி	209 ,,	பீஹாரி	28 ,,
தமிழ்	204 ,,	கன்னடம்	112 ,,
தெலுங்கு	264 ,,	ஓரியா	112 ,,
ஹிந்தி	750 ,,	ராஜஸ்தானி	139 ,,

குறிப்பு:—உருது பாஷை பேசும் ஜன எண்ணிக்கையை சென்செஸ் எடுக்கும்போது ஹிந்தி பாஷை பேசுபவர்களில் சேர்க்கப்பட்டுவிட்டது. அதாவது உருது ஹிந்தி பேசும் மக்கள் எண்ணிக்கை 750 லக்ஷம்.

சித்திருத்த மார்க்கம்.

(இங்கர்சால்.)

I.

மக்களைச் சீர்திருத்துவது எப்படி?

"அறியாமையை அகற்றுவதே
சரியான சீர்திருத்த மார்க்கம்"

ஒவ்வொரு மனிதனும் அவனைச் சுற்றியுள்ள சமய சந்தர்ப்பங்களினால் தான் உருப்பெருகிறான். பொதுவாக மக்கள் எல்லாம் குறைபாடுடையவர்களாகவே இருக்கிறார்கள். அதற்கு அவர்கள் ஜவாப்தாரிகளல்ல. ஒரு தனி நபரைப் பற்றியோ. ஒரு இனத்தைப்பற்றியோ இயற்கையானது கவலை எடுத்துக்கொள்வதில்லை.

உயிரை உயிர் தொடர்ந்து சென்று சென்று கடைசியில் மரணம் உயிரைத் தொடர்கிறது. எண்ணற்ற சந்தர்ப்பங்களினாலும், எண்ணற்ற இறந்தகால நிகழ்கால காரியங்களாலும் இயற்கையறிவும் கருத்துச் செயலும் உயிரும் உருப்படுத்தப்படுகின்றன. நிகழ்காலம் இறந்த காலத்தின் குழந்தையும் எதிர்காலத்தின் தாயுமாகும்.

ஒவ்வொருவனும் இன்பம் அனுபவிக்கவும் உடலின் தேவைகளை உணவாலும் உடையாலும் பூர்த்தி செய்யவும் அவனவன் ஆற்றலுக்குத் தக்கபடி அன்பு, ஞானம், தத்துவ அறிவு, கலை முதலியவைகளினால் மன ஆசையைத் தணிக்கவும் முயல்கின்றான்.

காட்டானர் (அநாகரீகமுள்ள காட்டுமிராண்டி மக்களின்) தேவை மிகச்சொற்பமே. ஆனால் நாகரிகம் வளர வளர உடலின் தேவைகள் வாழ்க்கையின் தேவைகள் பெருகு

கின்றன. அறிவின் எல்லை விசாலமடைகிறது; மூளையின் ஆசையும் அதிகரிக்கிறது.

காட்டாளன் விஷயாதிகளை உணர்கிறான்; ஆனால் அவன் சிந்திப்பதே இல்லை. காட்டாளன் ஆசை அவனுடைய சிந்தனையினால் பாதிக்கப்படுவதில்லை; தத்துவஞானியின் சிந்தனையும் அவனது ஆசையினால் பாதிக்கப்படுவதில்லை. யுக்திவாத (அறிவு ஆராய்ச்சி) உணர்ச்சி தோன்றுவதற்கு முன்பே குழந்தைகளுக்குத் தேவைகளும் ஆசைகளும் உண்டு. எனவே மனித சமூகம் காட்டாள தசையும் தத்துவஞான தசையும் இல்லாமல் சாதாரண தசையில் இருக்கும்போது தான் தேவைகளும் ஆசைகளுமே முனைந்து நிற்கின்றன.

காட்டாளன் தோற்றங்களினாலும் உணர்ச்சிகளினாலும் அடக்கியாளப்பட்டு வந்தான். அவனது மனம் வலியற்றதாயும் இருந்தது; கஷ்டமில்லாத வழிகளையே பின்பற்றியது. தன் கண்ணிற்படுவனவற்றை யெல்லாம் அப்படியே நம்பினான். இயற்கையாகவே தொட்டதற்கெல்லாம் அவனுக்கு தெய்வீகத்தில் நம்பிக்கை இருந்து வந்தது. ஆபத்துகளும் துன்பங்களும் சதா தன்னைச் சூழ்ந்துகொண்டிருப்பது கண்டு கண்ணுக்கு எட்டாத ஒரு சக்தியை கற்பித்துக் கொண்டு அதன் உதவியை நாடினான். அவன் குழந்தைகளும் அவனையே பின்பற்றின. அநேக தேசங்களில் அநேக காயிரம் வருஷங்களாக அக்கால மக்களெல்லாம் தெய்வீக உதவியையே நாடி வந்தார்கள். அதனாலேயே எண்ணற்ற ஆலயங்களும் பலிப்பீடங்களும் கட்டப்பெற்றன. அவைகளுக்கு பலியிட்டும், பாட்டுப்பாடியும் தெய்வ வழிபாடுகள் நடத்தப்பட்டன. கடவுள் அருளை வேண்டி மக்கள் தங்களை வருத்தி துன்பப்படுத்தி வந்தார்கள். பிரார்த்தனையால் பயன்பெற்றதாக நம்பியபோது கடவுளுக்கு நன்றி செலுத்தினார்கள்.

இப்படியே இருந்த மனிதனது மூளையும் வெகு கஷ்டப்பட்டு மெல்ல மெல்ல விருத்தியடைந்து கொண்டே வந்தது. காலக்கிரமத்தில் மனம், தசைக்கும் நாருக்கும் (உடலுக்கு) உதவிபுரிய முன் வந்தது; சிந்தனையின் உழைப்பிற்கு நண்பனாயிற்று. மனிதன் எவ்வளவுக் கெவ்வளவு உழைப்போடு சிந்தனையைக் கலந்தானோ கைகளை, மூளையின்

பங்காளிகளாக்கிக் கொண்டானோ அவ்வளவுக்கவ்வளவு முன்னேறி வந்தான். இவை யாவும் அனுபவத்தின்பயனே.

இயற்கையானது தாராள குணமும் கன்னெஞ்சத் தன்மையும் வரப்போக்கித் தன்மையும் உடையதானாலும் நமக்கு தாயாகவும் நல்ல ஆசிரியையாகவும் இருக்கிறது; மற்றும் மக்களை ஏய்க்கும் குணமும் அதனிடமுண்டு. இயற்கைக்கு மேலாக நாம் உயரவும் முடியாது; தாழவும் இயலாது. நன்மை தீமைகள் அனைத்துக்கும் இயற்கையே வித்தாகவும் எருவாகவும் இருக்கிறது. பொருள்களை உற்பத்தி செய்வதும் போஷிப்பதும் காப்பாற்றுவதும் இம்சிப்பதும் இயற்கையே.

நற்செயல்கள் பலன் என்னும் கனிகளைத் தருகின்றன. அக்கனிகளுக்குள் வித்துகள் இருக்கின்றன. அந்த வித்துகளிலிருந்து மீண்டும் கனிகளும் வித்துகளும் தோன்றுகின்றன. உயர்வான சிந்தனைகள் ஒருபொழுதும் அழிவதில்லை; அன்பான வார்த்தைகளும் உலகத்திலிருந்து மறைவதில்லை.

ஒவ்வொரு மூளையும் ஒரு வயல். அந்த வயலிலே சிந்தனா வித்துகளை இயற்கை விதைக்கிறது; விளைவு மண்ணை (மூளைத்தன்மையை) ப்பொறுத்திருக்கிறது.

நம்மைச்சுற்றி வீசும் காற்றுக்கு நறுமணமளிக்கும் ஒவ்வொரு பூவும் ஜீவனில் ஒரு நல்லுணர்ச்சியை உண்டுபண்ணுகிறது. எல்லையறியாப் பெருங்கடலின் கர்ஜனையும், நீர்வீழ்ச்சியின் கம்பீர கீதமும் இடியேற்றின் முழக்கமும், நீரோடையின் ஆனந்தச் சல சலப்பும், இதர தழைகளின் இரகசியப் பேச்சுகளும், பட்சி ஜாலங்களின் கானமும், காற்றின் பெரு மூச்சும் தான் மிருதயத்தைப் பாலாகக் கொட்டும்படி மனிதனுக்குக் கற்பித்ததுடன் துயருக்கும் நம்பிக்கைக்கும் காதலுக்கும் மரணத்துக்கும் பேசும் சக்தியையும் அளித்தன.

மலைத்தொடர்களிலும் அலை காட்டும் மைதானங்களிலும், வளைந்து வளைந்து ஓடும் சிற்றாறுகளிலும், மணற் காட்டு மணலிலும், மேக மண்டலத்திலும், இரவிலும் பகலிலும், பனியிலும் மழையிலும், சாந்தத்திலும் கொடுங்காற்றிலும், வனங்களிலும் பள்ளத்தாக்குகளிலும், ஜோதியின் சப்த நிறங்களிலும், மற்றும் உயிரும் வளர்ச்சியும் அழிவும்,

மரணமும் உள்ள யாவற்றிலும், பறக்கிற, மிதக்கிற, நீந்துகிற சர்வத்திலும், இயங்குவன எல்லாவற்றிலும், பொருள்களுக்கு உருவத்தையும் குணத்தையும் அளிக்கும் அனைத்திலும் தன் கருத்துகளின் வித்துகளையும் குறிகளையும் மனிதன் கண்டு கொண்டான். மனிதனால் அமைக்கப்பட்டனவெல்லாம் இயற்கையின் ஒரு பகுதியாயின. இனித் தோன்றப்போகும் உயிர்களுக்கும் உதவியளிக்கக் கூடியவையாயின. கிரேக்கர்களின் சலவைக்கற்கள், இன்னிசைக்கீதங்களைப் போல் பரிபூரணத்தன்மையைச்சுட்டிக்காட்டி வாழ்க்கையின் இனிய ராகங்களைக் கற்பிக்கின்றன. பெரிய காப்பியங்களும், சித்திரங்களும், நூதனக்கருவிகளும் கொள்கைகளும் இயற்கைத் தத்துவங்களும் மனித அறிவை விசாலப்படுத்தி உருவாக்குகின்றன. உலகத்தில் தோன்றியிருப்பனயாவும் இயற்கையானவைகளே; யாவும் இயல்பாகத் தோன்றியவைகளே. இயற்கை எல்லைக்கப்பால் செல்ல மனிதனால் முடியாது.

ஆம்! பன்னூற்றாண்டுகாலம் எல்லாத்துறைகளிலும் இயற்கைக்கு அதீதமான ஏதோ ஒன்று இருப்பதாக மனிதன் அந்தரங்கசுத்தியுடன் நம்பியிருந்தான். இயற்கையில் ஒற்றுமை இருப்பதாக அவன் நம்ப வில்லை. காரணகாரியங்களைப் பற்றியோ, சக்தியின் அழியாத்தன்மையைப் பற்றியோ அவன் அறிந்திருக்கவு மில்லை.

வைத்தியத்துறையில், வசியங்களிலும், மாயா ஜாலங்களிலும் கலசங்களிலும், மந்திரங்களிலும், அவன் நம்பிக்கை கொண்டிருந்தான்.

ரஸாயனத்துறையில், நித்திய சஞ்சீவியையும், கற்பங்களையும், கீழ்த்தர உலோகங்களையும் பொன்னாக்கும் ரஸவாத வித்தையையும் தேடிக்கொண்டிருந்தான்.

இயந்திரத்துறையில், ஓயாமலோடும் ஒரு கருவியைக் காணமுயன்று கொண்டிருந்தான். ஏற்ற மரங்களை ஏதோ ஒரு மாதிரி இணைத்து சக்தியை உண்டுபண்ணலாமென்றும் நம்பியிருந்தான்.

அரசியல் துறையில், கடவுளே சர்வாதிகாரி யென்றும் அவனிடமிருந்தே மக்கள் அதிகாரம் பெறுகிறார்களென்றும் எண்ணியிருந்தான்.

பன்னூற்றாண்டு காலம்கடவுளுக்கு கீழ்ப்படிவதே மேலா னஒழுக்கமென்றும் கருதியிருந்தான். உணர முடியாத-அள விட முடியாத எல்லையற்ற எதோ ஒரு சக்தியைப் புகழ்வ தும் வணங்குவதும் மேலான மதம் என மதித்திருந்தான்.

அனுபவத்தினாலோ, ஆராய்ச்சியினாலோ அல்லது தற்செயலாகவோ சில நோய்களை இயற்கை முறைகளால் சொஸ்தப்படுத்தலா மென்றும் நோயைத் தணிக்கும் சக்தி இலைகளுக்கும், பட்டைகளுக்கும் உண்டென்றும் உணர்ந்து கொண்டான்.

இதுவே அறிவு விளக்க ஆரம்பகாலம். காலக்கிரமத் தில் இயற்கை வழிகளில் அவனுக்குநம்பிக்கை பிறந்து வலுப் பெற்றது; வசியத்திலும் கவசங்களிலும் நம்பிக்கை குறைந் தது. அறிவும் அறியாமையும் நெடுங்காலம் போராடினர்; கடைசியில் இயற்கை வெற்றி பெற்றது. நோய்களெல்லாம் இயற்கையாகவே உண்டாகின்றனவென்றும் மருந்துகள் எல்லாம் இயற்கை விதிப்படியே செயலாற்றுகின்றனவென் றும் நாம் இப்பொழுது அறிகிறோம். மருந்தினால் எப்படி கணித சாஸ்திரப் பிரச்சினைகள் முடிவு பெறமாட்டாவோ அப்படியே வசியத்தினாலும், மந்திரங்களினாலும், கவசங் களினாலும் நோய்கள் ஓழிய மாட்டா என்று நாம் இப்பொ ழுது அறிந்து கொண்டுவிட்டோம். தெய்வீக பரிகாரம் எது வுமில்லை யென்றும் நாம் இப்பொழுது அறிந்திருக்கிறோம்.

ரஸாயனத் துறையில் நெடுங்காலம் கொடிய போர் நடந் தது; இப்பொழுது நித்திய சஞ்சீவிக்காக எவரும் தவித் துக்கொண்டிருக்கவில்லை; கற்பங்களைக்காண எவரும் முயல் வதுமில்லை. ரஸாயன சாஸ்திரத்தில் இயற்கைக்கு அதீத மான எதுவும் இல்லையென்றும் நாம் அறிந்து விட்டோம். பொருள்கள் எல்லாம் தத்தம் இயற்கைக் குணங்களுக்கு மாறு படாமலிருப்பதை நாமறிகிறோம். ஒரு பொருளின் எத்தனை எத்தனை அணு வேறொரு பொருளின் எத்தனை எத்தனை அணுவோடு சேருமென்றும் நாமறிவோம். அற்புதமான தாக ரஸாயன சாஸ்திரத்தில் எதுவுமில்லை. மற்றும் ரஸாயன சாஸ்திரத்தில் மந்திரமுமில்லை; தந்திரமு மில்லை; தெய்வீகத்துக்கும் அதில் இடமில்லை. இயற்கை மாறக்கூடியதல்லவென்றும் அது எப்பொழுதும் ஒரே படித் தாகவே இருக்குமென்றும் நிலக்கவர்ச்சி எப்பொழுதும் ஒரே

மாதிரியாகவே இருக்குமென்றும் ஒரு விருத்தத்தின் (Circle) குறுக்களவுக்கும் சுற்றளவுக்குமுள்ள சம்பந்தம் எப்பொழுதும் ஒன்றுபோலவே இருக்குமென்றும் காமறிவோம்.

யந்திர நிர்மாணத்துறையிலும் இயற்கைச் சக்தியே தலைமை வகிக்கின்றது. மனிதனுக்கு சக்தியை சிருஷ்டிக்க முடியாதென்றும் எக்காரணங்கொண்டும் அழிக்கமுடியாதென்றும் காமறிவோம். யந்திரங்கள் செய்யும் கருமான் தெய்வீக உதவியை காடுவதில்லையென்பதையும் காமறிவோம். ஆன் சில இயற்கை விதிகளை ஆதாரமாகக் கொண்டு உழைப்பதாயும் அதை மாற்றவந்த சக்திக்கும் முடியாதென்றும் மனிதனுக்குத் தெரியும்.

அதுபோலவே, நம்மை ஆளும் சர்க்காரின் அதிகாரம் ஆளப்படுவோரிடமிருந்தே கிடைக்கிறதென்றும் தெய்வீகத் திலிருந்து கிடைக்கவில்லையென்றும் அமெரிக்கர்களாகிய காம் கண்டறிவோம். தெய்வ அருளினாலே ராஜாக்கள் சிம்மாசனத்தில் உட்கார்ந்திருக்கிறார்களென்று நாம் நம்புவதில்லை. வெள் கட்டளையிடுவதாலேயே மற்றவர்கள் பிரஜைகளாகவும் அடிமைகளாகவும் இருப்பதாயும் காம் நம்பவில்லை.

எனவே வாழ்க்கை நியதியைப்பற்றி நமது கருத்துகள் எல்லாம், உலக நடப்பைப்பற்றிய நமது கருத்துக்கள் எல்லாம் மாறுபடைந்துவிட்டன. இப்பொழுது, மகிழ்ச்சியையும் கண்ணியையும் உண்டுபண்ணுவனவெல்லாம் இயற்கையின் பாற்பட்டதென்றே யாவரும் நம்புகிறார்கள். ஆராய்ச்சியற்ற அனுபவம் ஒழுக்கத்தின் அடிப்படையுமல்ல. அது அடிமை மனப்பான்மையின் பயனாகும். நாம் பெற்ற உதவியளவுக்குப் பிரதியாக உழைப்பதே சுதந்தரமானது; கௌரவமானது. கண்ணை மூடிக்கொண்டு கீழ்ப்படிந்து விடுவது குருட்டுத்தனமான அடிமை வணக்கமாகும். உண்மையான ஒழுக்கமே சுதந்தரம், ஞானம் இவைகளின் மூலமும் கண்ணியமாகும்.

உண்மையான மதத்துக்கும் தெய்வீகத்துக்கும் எத்தகைய சம்பந்தமுமில்லையென்று பெரும்பாலார் நம்பத்தொடங்கிவிட்டார்கள். ஆதாரமில்லாமல் நம்புவதும் ஆதாரத்தை அலட்சியம் செய்து நம்புவதும் உண்மையான மதமாகமாட்

டாது. அறியமுடியாததை வணங்குவதும் அர்த்தமில்லாத ஒன்றுக்கு எதேனும் ஒன்றைச் சொல்வதும் மதமாகாது. சடங்குகள், பிரார்த்தனைகள், வேதங்கள், அற்புதங்கள், விசேஷ தெய்வ கடாட்சம், கடவுளருள் முதலியன இயற்கைக்கு அதீதமானவை; அவை உண்மைச் சமயத்தின் பாற்பட்டனவல்ல.

விஞ்ஞான சாஸ்திரங்களுக்கு இயற்கையான ருசுப்பதித்தக் கூடிய உண்மைகளே ஆதாரம். எனவே மனித வாழ்க்கைத் தத்துவத்துக்கும் மதத்துக்கும் இயற்கை யுண்மைகளே அடிப்படையாக இருக்கவேண்டும்.

II

உலகத்தைச் சீர்திருத்துவது எப்படி?

அறியாமையே முட்டுக்கட்டை.

நமக்கு முக்கியமாக வேண்டப்படுவது அறிவு தானே. முன்னேற்றத்துக்கு அடிப்படையாக நாம் முக்கியமாக மக்களுக்கு கற்பிக்க வேண்டியவை எவையெனில், பிரபஞ்சம் இயற்கையானது; மனிதனுக்கு மேற்பட்ட ஒரு கடவுள் இல்லை; மூளையை விருத்தி செய்து கொள்வதினால் பல ஆபத்துக்களையும் தீமைகளையும் நாம் தீக்கிக்கொள்ளலாம்; இயற்கை உண்மைகளையும் சக்திகளையும் நமக்கு அநுகூலப்படுத்திக் கொள்ளலாம்; புதுக்கருவிகளை சிருஷ்டித்து உடலின் தேவைகளை ஓரளவு பூர்த்தி செய்து கொள்ளலாம்; சிந்தனையினாலும் பரிசீலனையினாலும் முயற்சியினாலும் மனோவேட்கைகளைத் திருப்திப்படுத்தலாம் என்பனவாகும்.

இயற்கைக்கு அதீதமான தெய்வீக உதவியை நாடுவதை மனிதன் நிறுத்திவிடவேண்டும். தெய்வ வணக்கத்தினால் சௌக்கியம் உண்டாகுமென்றும் பிரார்த்தனையினால் ஆக்கம் பெறமுடியாதென்றும்மனிதன் இதற்குள்உணர்ந்திருக்கவேண்டும். தெய்வீக சக்தி ஒடுக்கப்பட்டவர்களுக்கு உதவியளிக்கவில்லையென்றும் உடையற்ற ஏழைகளுக்கு உடையளிக்கவில்லையென்றும் பசித்தார்களுக்குச் சோறூட்டவில்லையென்றும் குற்றம் செய்பவர்களைக் காப்பாற்றவில்லையென்றும்

கொள்ளை நோய்களைத் தடுக்கவில்லையென்றும் அடிமைகளை விடுதலை செய்பவில்லையென்றும் அவன் இதற்குள் அறிந்திருக்கவேண்டும்.

இயற்கைக்கு அதீதமானது எதுவுமில்லை யென்பதை யுணர்ந்து மக்கள் உலக விஷயங்களை, இயற்கை உண்மைகளை கணிக்கத்தொடங்கவேண்டும்.

முதன் முதலில் போரினால் மனிதனது சக்தியும் செல்வமும் வீணாவதை மக்கள் தடுக்கவேண்டும். போரை—மிருக பலத்தின் பிரயோகத்தை ஒழிக்க நல்லோரான ஆடவரும் பெண்டிரும் முயலவேண்டும். நாகரிக மடையாத மனிதன் தன் மிருக பலத்தையே முக்கியமாக நம்புகிறான்; இது சரி, இது தப்பு என நிர்ணயஞ் செய்யக்கூட மனிதன் தன் மிருக பலத்தையே உதவிக்கு உழைக்கிறான். நாகரிக மடைந்த மக்கள் தமக்குள் ஏற்படும் அபிப்பிராய வித்தியாசங்களை மாற்றிக்கொள்ள ஆயுத பலத்தை நாடமாட்டார்கள். அவர்கள் தமது விவகாரங்களைப் பஞ்சாயத்து மூலமும் நீதிஸ்தலங்கள் மூலமும் முடிவு செய்து கொள்கிறார்கள். இதுவே காட்டானனுக்கும் நாகரிக மடைந்தவனுக்குமுள்ள முக்கியமான வித்தியாசம். காட்டானன் முறைகளையே அரசர்கள் பொதுவாகப் பின்பற்றுகிறார்கள். அவர்களது விவகாரங்களை முடிவு செய்ய போரைத்தவிர வேறு வழியில்லை. ஒவ்வொரு தேசமும் தானாக நியாயத் தீர்ப்புச் செய்துகொள்கிறது. தன் முடிவை அமலுக்குக் கொண்டுவர ஒவ்வொரு தேசமும் தானாகவே முயற்சி செய்து கொள்கிறது. இதனாலேயே போர் உண்டாகிறது. தம் சகோதர மக்களைக் கொல்லப் பயங்கரப் போர்க்கருவிகளைக் கண்டு பிடிக்க ஒவ்வொரு தேசமும் அதிதீவிரமாக முயற்சி செய்கிறது. 1800 வருஷ காலம் சமாதான போதனை செய்யப்பட்டு வந்தும் நாகரிக மடைந்த தேசங்கள் இப்பொழுதும் போர் வெறியுடையனவாகவே இருக்கின்றன. இன்று (அதாவது 1932-ல்) ஐரோப்பாவில் சுமார் 110 அல்லது 120 லக்ஷம் போர்வீரர்கள் போர் முனைக்குச் செல்லத் தயாராக இருக்கிறார்கள். ஒவ்வொரு நாகரிக தேச எல்லைப்புறங்களிலும் கோட்டை கொத்தளங்களும் படை வீடுகளும் கட்டப்பட்டிருக்கின்றன. சமுத்திரங்களில் இரும்புக்கவசம் பூண்ட போர்க் கப்பல்கள் பெரிய பீரங்கிகள் தாங்கி நிரம்பியிருக்கின்றன. போர்க் கருவி உற்பத்திக்கு அமிதமாகச் செலவு செய்து நாகரிக

தேசங்கள் எல்லாம் வறுமைப்பட்டுக் கிடக்கின்றன. கிறிஸ்தவ தேசங்களில் மொத்த யுத்தக்கடன் மூவாயிரங்கோடி டாலராக இருக்கின்றது. இந்தப் பெருந்தொகைக்கு வருஷா வருஷம் வட்டி கொடுத்துத்தீரவேண்டும்; இதற்கு ஏழை மக்களின் உழைப்பின் பலன்தான் பயன்படுத்தப்படுகிறது. உழைத்துப் பாடுபடும் பாட்டாளிகளில் பெரும்பாலோர் ஒரு நேர ஊணுக்கும் கதியற்றவர்களாய் இருக்கிறார்கள். எனவே பாட்டாளிகளின் தமது இன்றியமையாத் தேவைகளை அழித்தே யுத்தக் கடனுக்கு வட்டி கொடுக்க வேண்டியதாக ஏற்பட்டிருக்கிறது. போர்க் கடனும் வருஷா வருஷம் ஏறிக் கொண்டே போகிறது. இந்த நிலைமையில் ஏதாவதொரு மாற்றமேற்பட்டுத் தீரவேண்டும். இன்றேல் கிறிஸ்தவ தேசங்கள் பாப்பராவது நிச்சயம்.

யுத்தக் கடன் வட்டியினத்தில் மட்டும் வருஷந்தோறும் 90 கோடி டாலர் கொடுக்கப்பட்டு வருகிறது. தரைப்படை கப்பற்படைச் செலவுக்கும் போர்க்கப்பல்கள் பழுது பார்ப்பதற்கும் புதுப்போர்க் கருவிகள் உண்டுபண்ணுவதற்கும் யுத்தக்கடன் வட்டியுட்பட சுமார் 60 லக்ஷம் டாலர் பிரதி தினமும் செலவு செய்யப்படுகிறது. ஒவ்வொரு வேலை நாளுக்கும் 10 மணி நேரவீதம் வேலை செய்வதாக கணக்குப் போட்டுப் பார்த்தால் அந்த வேலைக் கூலியில் ஒரு மணி நேரத்திற்கு 6 லக்ஷம் டாலர் அல்லது ஒரு நிமிஷ நேரத்திற்கு 10 ஆயிரம் டாலர் வீதம் போருக்காகப் பாழாக்கப்படுகிறது.

இந்த ஹிமாலயத் தொகை நமது சகோதர மக்களைக் கொல்லவும் கொல்வதற்கு ஆயத்தம் செய்யவும் பாழாக்கப்படுகிறது என்பதை அனைவரும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். இந்தப் பெருந்தொகையினால் மக்களுக்கு எவ்வளவு நன்மைகள் செய்யலாமென்பதையும் யோசித்துப் பாருங்கள்! இதனால் எத்தனை எத்தனை பள்ளிக்கூடங்கள் கட்டலாமென்றும் எத்தனை எத்தனை ஆயிரம் வறியோர் கஷ்டங்களை நீக்கலாமென்றும் எண்ணிப்பாருங்கள்! எத்தனை எத்தனை ஆயிரம் அகதிகளுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கலாமென்றும் எத்தனை எத்தனை ஆயிரம் நிர்வாணிகளுக்கு உடை வழங்கலாமென்றும் சிந்தித்துப்பாருங்கள்.

போரை ஒழிக்க விரும்பினால் உலக விவகாரங்களைத் தீர்க்கச் சர்வதேசப் பஞ்சாயத்தை ஏற்படுத்தவேண்டும்.

சமயப் பிரசுரம்.

இப்பிரபஞ்சமானது ஒரு அழகிய இயற்றிரள்! இவ்வியற்றிரம் வரையறையாய் உள்ள சிலவரமான சட்டங்களுக்கு இசைந்து இயங்குகின்றது. இச்சட்டங்களை ஒரு பாகுபாடாய் அமைத்து அவைகளை இயற்கைச் சட்டங்கள் என்றும் கூறலாம்; இச்சட்டங்கள் தாம் பிரபஞ்சத்தை ஆண்டு வருகின்றன. ஆனால் இயற்கைச் சட்டங்களின் பல உண்மைகளை நாம் அறியாமலும், ஒருவாறு அறிந்திருப்பினும் பூரணமாக அறியாமலும் இருக்கக் கூடும் என்பதாலும் காலத்தில், அநுபவத்தில், ஆராய்ச்சியில், இவை எனைத்தும் மனிதனுக்கு விளங்காமற்போகா. இதன் பின்னர் பிரபஞ்சத்தின் இகழ்ச்சிகள் எனைத்தும் நாம் ஒரே முறையில் அமைத்து அதனை கைவல்யம் செய்து கொள்ளவும் கூடும் என்பது அறிவியல் ஆராய்ச்சியின் துணிபு.

இந்தப் பஞ்சாயத்து நிரந்தரமாக இருந்து வேலை செய்து வரவேண்டும்; அதற்கு எல்லாத் தேசங்களும் பிரதிநிதி களைத் தேர்ந்தெடுத்து அனுப்பவேண்டும். அந்தப் பஞ்சாயத்தின் முடிவுக்கு எல்லாத் தேசங்களும் கட்டுப்பட்டு நடக்க வேண்டும். ஒவ்வொரு தேசமும் தனக்கெனச் சொந்தமாகத் தரைப்படையோ, கப்பற்படையோ வைத்துக்கொள்ளக் கூடாது. பஞ்சாயத்தார் தீர்ப்பை அமலுக்குக் கொண்டுவர பஞ்சாயத்தாருக்குமட்டும் கொஞ்சம் தரைப்படையும் கடற் படையும் இருக்கவேண்டும். எனவே காரிக தேசங்கள் தரைப்படையும் கடற்படையும் வைத்துக்கொண்டிருக்க நியாயமே இல்லை.

போரினால் உண்டாகும் துன்பங்களையும் கொடுமை களையும் இன்னைசகளையும் மக்கள் உள்ளத்துப் பதியும்படி சித்தரித்துக்காட்ட மனிதனுக்குப் போதுமான கற்பனா சக்தியில்லை. மக்கள் உடலைப் பிய்த்தெறியும் பீரங்கிகளைப் பற்றியும் குண்டுகளையும் சிந்தித்துப்பாருங்கள். போரில் மடிந்தவர்களின் விதவைகள், அநாதைக் குழந்தைகள் ஆகியவர்களின் நிலைமையை உன்னிப்பாருங்கள். கொண்டி, சப்பாணி, முடமான வீரர்களை எண்ணிப்பாருங்கள்!

இப்பூவுலகின் கண் தோன்றிய ஒவ்வொருவரும் தத்தம் ஜாதிமதமே மேலென்றும், தத்தம் ஜாதிமதங்களிலேயே சிறந்த கொள்கைகள் அடங்கியிருக்கின்றனவென்றும், எங்களுடைய ஜாதிமதமே மோட்சவழியைக் காட்டும் என்றும், இதற்குமிஞ்சிய ஜாதி, மதம், இந்த தரணியில் காணக்கிடைப்பது அரிதென்றும், அவரவர்களுடைய புத்தி யுக்திக்குத் தக்கவாறு பேசியும், பிரசங்கித்தும், மகாநாடு கூட்டியும், நாங்கள் மிக உயர்ந்த ஜாதியார் என்று சொற்பெருக்காற்றியும், பத்திரிகை மூலமாக வரைந்தும் இன்னும் பல்வேறு விதத்தாலும் தம் ஜாதிக் கொள்கைகளை நிலை நிறுத்துவதற்கும் பாடுபட்டு வருகின்ற மைந்தர்கள் சமயப்பித்தர்கள் கவனிக்கவும். மனிதனுக்காக ஜாதிமதமா? அல்லது ஜாதிமதத்திற்காக மனிதனா? ஜாதிமதம் என்பது என்ன? எதற்காக அது மனிதருக்கு ஏற்பட்டது? ஜாதிமதத்தால் இன்று வரை ஏற்பட்டது என்ன என்பதைத் தோழர் இராமலிங்க சுவாமிகளுடைய வாக்கைக் கொண்டு கவனிக்கவும்:—

1. "சாதியும் மதமும் சமயமும் பொய்யென, ஆதியில் உணர்த்திய அருட்பெருஞ்ஜோதி"

2. "சமயம் குலமுதற் சார்பெலாம் விடுத்த, அமயம் தோன்றிய அருட்பெருந் ஜோதி."

3. உயிர் எலாம் பொதுவின் உளம்பட நோக்குக, செயல் எலாம் விடுக எனச்செய்ய சிவமே!"

4. "மதத்திலே அபிமானம் கொண்டு உழல்வேன், குலத்திலே இழி மலத்தினும் கடையேன்."

5. "மானம் மேலிடச் சாதியே மதமே வாழ்க்கையே எனவாரிக்கொண்டு அலைந்தேன், ஈனமே, பொருள் எனக் களித்து இருந்தேன்."

6. "சாதிமதம் சமயமெனும் சங்கடம் விட்டறியேன், சாத்திரச் சேறாடுகின்ற சஞ்சலம் விட்டறியேன்."

7. "கூறுகின்ற சமயமெலாம், மதங்களெல்லாம் பிடித்துக் கூறுகின்றார், பலன் ஒன்றுங் கண்டறியார்; வீணைநீறுகின்றார்; மண்ணாகி நாறுகின்றார்; அவர்பால் நீடுலகில் அழிந்துவிட நினைத்தேனோ?"

8. "வேதநெறி ஆகமத்தின்நெறி இவைகள் எல்லாம் சூது ஓதுகின்றன."

9. "கலையுரைத்த கற்பனையே நிலையெனக் கொண் டாடும் கண்மூடி வழக்கமெலாம் மண் மூடிப்போக."

10. "சாதியும் மதமும் சமயமும் தவிர்த்தேன், சாத்தி ரக்குப்பையுந்தணிந்தேன்"

11. "புல்லவாமனத் தேன் எனினும் சமயம் புகுதவா."

12. "..... அறிவிலேன் எல்லாம் அறிந்தவன்போற் பிறர்க்கு உரைத்தேன்; மலையுறு சமயவலை அகப்பட்டே மயங்கிய மதியினேன்....."

13. "மருளான பற்பலமார்க்கங்கள் எல்லாம் வழிதுறை தெரியாமல் மண்மூடிப்போக!"

14. "மதமென்றும், சமயமென்றும், சாத்திரங்களென் றும், மன்னுகின்ற தேவர் என்றும் பற்பலவிதமாய் விரிந்த விதம் ஒன்றும் தெரியாது மயங்கியவன் தனக்கே,..... அரு ளிறையே, சதம் என்னும்.....சாற்றும்."

15. "கொள்ளைவினைக் கூட்டுறவாய்க் கூட்டிய பல் சமயக் கூட்டமும், அக்கூட்டத்தே கூடுகின்ற கலையும், கள்ளமுறும் அக்கலைகள் காட்டிய பல் கதியும், காட்சிக ளும் காட்சிதரு கடவுளரும் எல்லாம், பிள்ளை விளையாட்டு என நன்கு அறிவித்து."

16. "நால்வருணம் ஆஸ்ரமம், ஆசாரம் முதலாம், நவி ன்ற கலைச்சரிதம் எலாம் பிள்ளை விளையாட்டே, மேல் வருணம், தோல் வருணம் கண்டறியார் இலை நீ விழித்துப் பார்."

17. "இயல் வேதாகமங்கள், புராணங்கள், இதிகாசம், இவைமுதலா இந்திரஜாலம் கடையாய் உரைப்பார், மயலுறு நூல் மாந்திரந்தான் சாலமென அறிந்தார் மகனே நீ நூல னைத்தும் சாலமென அறிக!"

18. "மதத்திலே மயங்கா மதியிலே விளைந்த, மருந்தை.....—."

19. "சமயமும், மதமும் கடந்தோர் ஞானசபை நடனம் புரிகின்ற தனியை."

20. படிப்படக்கி, சாதிமதம் சமயம் எனும் சழக்கையும் விட்டடக்கி."

21. இந்தச் சாதி இந்து மதம் எனும் வாய்ச்சழக்கையெலாம் தவிர்த்த, உத்தமனே....."

22. "பித்துறும் சமயப் பிணக்குறும் அவர்க்குப் பெரிதும் அரிதாகிய பேறே."

23. "மதம்பிடித் தவரெல்லாம் வாய்ப்பிடிப்புண்டு வந்து நிற்கின்றனர்; வாய்திறப்பிப்பான் கதம்பிடித்தவரெல்லாம் கடுப்பினிபாலே, கலங்கினர் ஆழ்ந்தனர் உலம்புறுகின்றார்; எய்வந்ததுன்பொழித்தவர்க்கறிவருள்வீர்!"

24. "தெய்வங்கள் பல பல சிந்தை செய்வாரும், சேர்கதி பல பல செப்புகின்றாரும், மெய்வந்த திருவருள் விளக்கம் ஒன்றில்லார், மேல்வினைவறிகிலர் வீண் கழிக்கின்றார்."

25. வெறிக்கும் சமயக்குழியில் விழ, விரைந்தேன் தன்னை விழாதவகை, மறிக்கும் ஒரு பேர் அறிவு அளித்தாய்."

26. "மதத்திலே சமய வழக்கிலே, மாயை மருட்டிலே, இருட்டிலே மறவாக், கதத்திலே மனத்தை வைத்து வீண் பொழுது கழிக்கின்றீர்."

27. "குலத்திலே சமயக்குழியிலே, நரகக்குழியிலே, குமைந்து வீண்பொழுது நிலத்திலே போக்கி மயங்கி ஏமாந்து நிற்கின்றார்."

28. "மதம் என்னும் பேய்பிடித்தாட்ட ஆடுகின்றார், சாகாத கல்வி கற்கும்தரம் இவர்க்கும் உளதோ?"

29. "சாதிசமயங்களிலே வீதி பல வகுத்த, சாஸ்திரக் குப்பைகள் எல்லாம் பாத்திரம் அன்றெனவே ஆதியில்..... அறிவித்தபடியே."

30. இருட்சாதித் தத்துவச் சாத்திரக் குப்பை, இருவாய்ப் புன்செயில் எருவாக்கிப் போட்டு, மருட்சாதிச் சமயங்கள் மதங்கள் ஆச்சிரம வழக்கெல்லாம், குழிக்கொட்டி மண் மூடிப்போட்டு.....அருட்சோதி வீதியில் ஆடச்செய்தீரே!..... ....." என்ற பாக்களாலும் அறிக.

ஐரோப்பா கண்டத்தில் வேலையில்லாதவர்களின் தொகை.

———):0:(———

1932-ம் வருஷம் ஜனவரிமீ 18உ ஜினிவாவில் (Geneve) கூடிய சர்வதேச சங்கத்தினரால், ஐரோப்பா கண்டம் முழுமைக்கும் சர்க்காரால் தொழிலில்லாதவர்களென ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கும் தொகையைக் கணக்கெடுத்திருப்பதாகப் பாரீசிலிருந்து வெளியாகும் லெ மத்தேன் (Le Matin) என்னும் பத்திரிகை கூறுவதாவது:—

உள்ர்.	மொத்த ஜனசங்கை.	வேலை இல்லாது தவிக்கும் மக்கள் எண்ணிக்கை.
ஜெர்மணி	67500000	5,349,000
ஆஸ்ட்ரியா	6700000	273,058
பெல்ஜியம்	827000	81,318
இங்கிலண்டு	40000000	25,72,600
இட்டலி	40000000	9,09,274
சூய்ஸ் (Suisse)	1000000	58,186
பிராஞ்சு	41100000	1,28,193
போலண்டு	32000000	2,59,626
ருமேனியா	19000000	43,917
U.S.A. அமெரிக்கா	120000000	20000000

அமெரிக்காவில் (U. S. A.) தொழிலாளர்கள் சங்கத்தின் கணக்குப்பிரகாரம் வேலையில்லாதார் 1931ம் வருஷம் நவம்பர் மீ கடைசியில் 20% என்று அதாவது 2½ கோடிக்கு மேல் என்று கணக்கெடுத்திருக்கின்றார்கள்.

காளியின் வஞ்சம்!

('ஏ ய ஸ்')

''கார்த்திகைமாதம் பிறந்தாலே இம்மாதிரிதான். கொட்டும் முழக்கும் ஆட்டமும் பாட்டும் எல்லாம் செவ்வாய் தவறாமல் கடைபெறும். அதில் கால்ராவும் சேர்ந்துவிட்டால் பின் சொல்லவேண்டியதில்லை. அர்த்தராத்திரியிலும் திடீரென ஓவென்று அலறும்சத்தம் கேட்கும். ஜனங்கள் எம்மாதிரி பயப்படுவார்கள் தெரியுமா? ஐயோ இந்தக் கார்த்திகை மாதம் கழிந்து விடாதா என்றுதான் கவலைப்படுவார்கள். எவ்வளவு தைரியசாலியும் அச்சமுறத்தக்க ஆர்ப்பாட்டங்களை இந்தச் சாமியாடிகள் நடத்திவிடுவார்கள். இல்லாவிட்டால் அவர்களுக்கு வாழ்வேது? இருக்கட்டும். நீ இந்தச் சாமியாடிகளை நம்புகிறாயா?'' என்று கேட்டான் ரங்கனாதன்.

ரங்கனாதன் எனது நண்பன். ஓய்வு காலத்தில் இருவருமாக மோட்டாரில் ஊர் சுற்றிக்கொண்டிருந்தோம். ஓர் தார் கார் ஒரு ரோட்டு வழியாகச் சென்று கொண்டிருந்தபோது எதிரே பம்பை முழக்கத்துடன் ஓர் பெருங்கூட்டம் வந்து கொண்டிருந்தது, ஓருவர்—அவர்தான் கோமரம்—மேலெல்லாம் சந்தனம் பூசிக்கொண்டு, கையில் சூலாயுதம் ஏந்தி, தலையை அங்கும் இங்கும் பயித்தியக்காரனைப் போல் ஆட்டிக் கொண்டும், இடையிடையே ஓவென்று அலறிக்கொண்டும் மெல்லமெல்ல ஆடியாடி நடந்து வந்தார். அவரைச்சுற்றி ஒரு குப்பல். கைகட்டி வாய் பொத்தி வந்த இவர்கள் சாமியாடி என்ன சொல்லப் போகின்றாரோ என்று எதிர் பார்த்த வண்ணம் மெல்ல நடந்து வந்தனர். இந்தக் கூட்டத்தைக் கண்ட பின்தான் ஆரம்பத்தில் சொன்னபடி எனது நண்பன் என்னிடம் ஒரு கேள்வி போட்டான். 'நான் இதையெல்லாம் நம்பவில்லை' யென்று பதில் சொல்லு

முன்பே அவன் சொன்னான்; "நீ நம்பினாலும் சரி, நம்பா விட்டாலும், சரி; நான் நிச்சயமாக நம்புகின்றேன். எனது வாழ்க்கையில் நிகழ்ந்த ஒரு பயங்கர சம்பவம் எனக்கு நம் பிக்கையளித்து விட்டது" என்று எனது நண்பன் சொன்ன வரலாற்றை இங்கு குறிப்பிடுகிறேன். நீங்கள் நம்புவதானா லும், இதை ஒரு முறை படித்துவிட்டு நம்புங்கள்:—

ரங்கனாதனும் காந்திமதியும் இளமை முதலே தோழர் கள். பிற்காலத்தில், அவர்கள் பருவமடைந்ததும், இருவரை யும் வாழ்க்கை வண்டியில் பூட்டிவிட வேண்டுமென்ற ஒப்பந் தத்தில் இருவருடைய பெற்றோர்களும் மனோவெழுத்து (கையெழுத்தில்லை) இட்டிருந்தனர். நாடாளும் பெரிய அரசாங்கங்களும், பொதுஜனப் பிரதிநிதிகளாக முன் வரும் அரசியல் வாதிகளும் தங்கள் தங்கள் ஒப்பந்தங்களை—வாக் குறுதிகளை மனம்போனபடி, சந்தர்ப்பத்துக்குத் தக்க வாறு காற்றில் பறக்கவிடும் காலமல்லவா இது? காந்திமதி யின் தாய் தந்தையரும் தாங்கள் செய்த வாக்குறுதியை மறுக்க வேண்டி நேர்ந்தது.

ரங்கனாதன் திருவனந்தபுரம் லாக்காலேஜில் படித்துக் கொண்டிருந்தான். அப்பொழுது காந்திமதி பி. ஏ. வகுப்பில் படித்துக்கொண்டிருந்தாள். இருவரும் ஒருவரை யொருவர் காதலித்து வந்தனர். இவர்களது காதல் வாழ்க்கையில் குறுக்கிட்டது சுடலையாண்டியும் அவர் புத்திரர் சங்கர லிங்கமுந்தான்.

சுடலையாண்டி ரங்கனாதன் ஊர்க்காளி தேவதையின் பிரதிநிதி, அதாவது பெரிய கோமரம். கோவில் விஷயமாக அவர்தான் சர்வாதிகாரி. இதன் மூலம் அவருக்கு இப்பக்கத் தில் அதிகச்செல்வாக்கு ஏற்பட்டிருந்தது. யாரும் அவருக் குப் பயப்படுவார்கள். அவர் மீது காளிதேவதை சதா குடி கொண்டிருப்பதாக யாவரும் நம்பினார்கள். அவர் வார்த் தைக்கு எதிர்வார்த்தை பேசினால் ஒருவேளை காளி கோபம் ஏற்படலாமல்லவா? காளியென்று எண்ணிய மாத் திரத்திலேயே அவளது பயங்கர சொரூபம் நம் கண் முன் தோன்றுகிறதே! காளி அவர் மூலமாகத் தான் பேசு வார். நோயாளிகள் நோய் நீங்க அவர் கைப்பிரசாதத்

துக்கு விரும்பி நிற்பார்கள். அவரது நாக்கின் நுனியிலேயே தங்கள் வாழ்வும் இருப்பதாகப் பலர் கருதினார். பின் அவர் கோபத்துக்கு ஆளாகிறவர் கதி அதோகதிதான். காளி தேவதை பிறருக்கு நன்மை செய்தாளோ செய்யவில்லையோ. அது எப்படியிருந்தாலும் சுடலையாண்டிக்கு மட்டும் அவள் நன்மையே செய்து வந்தாள் என்பது பிரத்தியட்சம். ஏன் ஒரு மிதாழிலுமில்லாத அவர் லட்சக்கணக்கில் பணஞ்சேர்க்க முடிந்தது எப்படி? காளி தேவதை புதையலைக் காட்டிக் கொடுத்ததாக ஊருக்குள் பேசிக்கொண்டனர். உண்மை அப்படியல்ல. அவருக்கு நல்ல வருமானம். காளி பக்தர்கள் தேவதைக்கு அர்ப்பணஞ் செய்யும் பொருள்களில் பெரும்பாகமும் அவர் கைக்குத்தான் போய்ச்சேரும். விசேஷ காலங்களில் சேரும் காணிக்கைகளுக்குக் கணக்கில்லை. செல்வமும், செல்வாக்கும் பெருகினால் கேட்க வேண்டுமா?

சுடலையாண்டிக்கு ஒரே புத்திரன் சங்கரலிங்கம், அதற்கு மேல் காளி தேவதை அவருக்கு புத்திரபாக்கியம் அளிக்கவில்லை. சங்கரனை பி. எ. வரையில் படிக்க வைத்தார். சங்கரனும், ரங்கனாதனும் ஒரே சமயத்தில் தான் திருவனந்தபுரம் காலேஜில் படித்தார்கள். அது தான் தோஷம். எனெனில் இருவரும் திருவனந்தபுரத்தில் காந்திமதியைச் சந்திக்க நேர்ந்தது. காந்திமதி ரங்கனாதனைக் காதலித்தாள். சங்கரன் காந்திமதியை மணக்க விரும்பினான்.

தன் புத்திரன் சங்கரனுக்குக் காந்திமதியைக் கொடுக்க வேண்டுமென சுடலையாண்டி கேட்டார். ஏராளமான பணம், செல்வாக்கு. பையன் பி. எ. தேறவில்லை. அதனால் என்ன முழுகிவிட்டது? நாலைந்து வருசர்வீஸ் இருக்கிறதல்லவா? தன் புத்திரியின் மனோ நிலைக்குமாறாக காந்திமதியின் பெற்றோர் நடக்க விரும்பவில்லை யென்றாலும், காளிதேவதையின் கோபத்துக்கு ஆளாக அவர்கள் சிறிதும் விரும்பவில்லை. காளியின் கோபம் குடும்பத்தையே நாசஞ் செய்து விடும்! அப்படி ரங்கனாதனுக்குக் கல்யாணஞ் செய்து விட்டால், காளி அவர்களை வாழ விடுவாளா?—என்றெல்லாம் சிந்தித்து சங்கரனுக்கு காந்திமதியை விவாகஞ்செய்து கொடுக்க அவள் பெற்றோர்கள் சம்மதித்தனர். கல்யாண தினமும் குறிப்பிடப்பட்டது.

ரங்கனாதனும் காந்திமதியும் சும்மாவிருக்கவில்லை. இந்த கட்டாய மணத்தினின்றும் விடுதலை பெற வழி தேடினர்.

கல்யாண தினத்துக்கு முன் தினமே காந்திமதி திடீரெனக் காணாமல் போய்விட்டாள். அவளோடு ரங்கனாதனும் மறைந்தான். எங்கு சென்றாள் என்று யாருக்குந்தெரியாது. அந்தக் காளி தேவிக்குங் கூடத் தெரியவில்லை போலும்! தெரிந்திருந்தால் இந்த ஆபத்தான வேளையில் தன் பக்தனுக்குத் தெரிவியாமலிருப்பாளா? பத்துதினங்களுக்குப் பின்புதான் பத்திரிகைகள் மூலம் விஷயம் வெளியாயிற்று. ரங்கனாதனும் காந்திமதியும் ரிஜிஸ்டர் விவாகம் செய்து கொண்டார்கள் என்ற விஷயத்தை அறிந்ததும் சுடலையாண்டியும் சங்கரனும் அடைந்த கோபத்துக்கு அளவில்லை. காளி தேவதை மூலம் இவர்கள் வாழ்க்கையைக் குலைத்து விடுவதாகச் சபதம் செய்தனர். தம் புத்திரிக்கு என்ன நேருமோ என காந்திமதியின் பெற்றோர்கள் கலங்கினர். காந்திமதி உயர்தரப்படிப்பு படித்திருந்தபோதிலும் தேவதைகள் விஷயத்தில் அவள் அதிக நம்பிக்கை கொண்டிருந்தாள். பெற்றோர் வளர்த்த முறை அப்படி! ஒரு வேளை காளி தங்களுக்குத் தீங்கிழைக்கக் கூடும் என்ற அச்சம் அவள் மனதில் சதா உறுத்திக் கொண்டிருந்தது. ரங்கனாதன் எவ்வளவோ தேறுதல் கூறியும் அவள் தைரியங்கொள்ளவில்லை. ஆகவே ஆறு மாத காலத்திற்குக் கிராமவாழ்க்கையை மேற்கொள்வதென்று தீர்மானித்தனர்.

குமரி எல்லைக்குச் சமீபமுள்ள மருத்துவ மலையடிவாரத்தில் அவர்கட்கு ஒரு சிறு கிராம முண்டு. அங்கு வசிப்பவர்களெல்லாம் காந்திமதியின் தந்தையாருடைய நில புலன்களைப்பார்வையிடும் பண்ணையாட்கள் தான். மலைமேல் ஒரு நல்ல வீடும் கட்டியிருந்தார்கள். அஞ்ஞாத வாசத்திற்கு காந்திமதி தம்பதிகள் தேர்ந் தெடுத்தது இந்த மலைவீடுதான். காந்திமதியின் அச்சத்தைப் போக்கிமனோ அமைதியை உண்டு பண்ணி விடலாமென ரங்கனாதன் எண்ணினான். துணைக்கு ஒரு பட்டாணிய வேலைக்காரனையும் கூட்டிக்கொண்டு தம்பதிகள் மலைவாசத்துக்குத் தயாரானார்கள்.

ஐந்து மாதகாலம் அவர்கள் வாழ்க்கை நிம்மதியாக நடைபெற்றது. ஓர் நாள் திடீரென இந்த நிம்மதிக்கு பங்கம்

நேர்ந்தது. எல்லாம் ஓர் கடிதத்தின் மூலமே. "தை அமா வாசை நெருங்கி விட்டது—எச்சரிக்கை" என்று எழுதப் பட்ட கடிதமொன்று தபாலில் காந்திமதிக்கு வந்து சேர்ந் தது. இதில் ஏதோ அபாயமிருப்பதாகக் காந்திமதி கருதி னாள்.

முன் மருத்துவமலை திருடர்கள் புகலிடமாயிருந்தது. பேர்பெற்ற ஜம்புலிங்கம் கூட்டத்தார் இங்கேதான் தங்கள் மூலஸ்தானத்தை ஏற்படுத்தியிருந்தார்கள். அச்சமயம் அடி வாரத்தில் குடியிருப்பு ஒன்றுமில்லை. எல்லாம் ஏகக்காடாக வேயிருந்தது. கள்ளர்கள் தங்களுக்கு அதிபிரீதியான ஓர் காளிகோவிலை ஏற்படுத்தியிருந்தார்கள். கள்வர் கூட்டம் ஒழிக்கப்பட்டபின்தான் மலையடிவாரத்தில் சிற்றூர் ஏற் பட்டது. மலைமேலிருந்த காளிக்குப் பெருவாழ்வும் ஏற் பட்டது. இந்த மலைக்குச் சமீபமுள்ள ஊரில் ஒரு சிவன் கோவிலுண்டு. தை மாத அமாவாசையிரவு சிவனும் காளி யும் சந்திப்பதாயும், சிவன் காளிக்கு ஓர் உயிர்ப்பலி கொடுத்து அவளைத் திருப்திப்படுத்துவதாயும் ஜனங்கள் நம்பி வந்த னர். ஆகவே அமாவாசையன்று கட்டாயம் ஓர் ஆள் இறந்துபடுவது திண்ணம் என்ற நம்பிக்கையும் மக்கள் மனத்தில் வேரூன்றியிருந்தது. யாராவது அன்றைய தினம் இறந்தால் அது சிவன்—காளி சந்திப்பால் ஏற்பட்டதாகவே எண்ணப்பட்டது. இந்தக்கதையை காந்திமதியும் அறிந் தாள். காந்திமதிக்குப் பழைய திகில் பீடித்து விட்டது. காளிதேவியின் கடுங்கோபத்திற்கு ஆளான தன்னையே இம்முறை பலி கொள்ளப் போகும் விவரத்தை அறிவிப்பதே இந்த ரகசியக் கடிதத்தின் அறிகுறியென எண்ணினாள். அவளைத் தேற்றுவது ரங்கனாதனுக்கு மிகுந்த கஷ்டமாகி விட்டது. இதெல்லாம் வெறுங்கட்டுக்கதையென்றும், மனத் தைத் தளரவிட்டால் ஆபத்து ஏற்படுமென்றும் அவன் எவ்வளவோ தைரியப்படுத்தியும், நீண்ட காலமாக பயம் மனத்தில் ஊறிப்போய் விட்டபடியால் அவளை தைரியப் படுத்த முடியவில்லை. அமாவாசையன்று, தான் இறப்பது நிச்சயமென காந்திமதி நம்பினாள். ஊரை விட்டுப்போய் விடலாமென்றால், காளியின் சக்தி செல்லாத இடமுண்டா? எங்கு ஓடினால்தானென்ன?

ரங்கனாதனுக்கு ஒரே வழிதான் தோன்றியது. தனது வேலையாள் உலன்கானை அழைத்து விஷயத்தைச் சொன் னான். பலத்த சிரிப்புத்தான் பதிலாக வந்தது. "என்ன?

கல் சிலைகள் மனித உருவெடுத்து நடமாடுவதாம்! உயிர்ப் பலி கொடுப்பதாம்! இதை நீங்களும் நம்புகிறீர்களா? அம் மாளுக்கு ஏதோ மூளைக்கோளாறு ஏற்பட்டிருக்கவேண்டும். ஆனால் ஒன்று செய்வோம். நாமிருவரும் காளிகோவி லுக்குப்போய் விசாரித்து வருவோம்'' என்று உஸன்கான் சொன்னான்.

ரங்கனாதனும் உஸன்கானும் காளிகோவிலுக்குச் சென்றார்கள். மற்றக் கோவில்களைப்போல காளியின் உரு வம்அதி பயங்கரமான கோரரூபத்துடன் விளங்கியது. ஒரு பூசாரியும் அங்கு காணப்பட்டான். நாளையதினம் அமாவா சையாச்சே; இங்கு ஏதாவது விசேஷம் நடப்பதுண்டா? என்று ரங்கனாதன் பூசாரியிடம் கேட்டான். பூசாரியின் பதில் அவ்வளவு தெளிவாக இல்லை. ''என்னமோ சொல் லிக்கொள்கிறார்கள். ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். நாளையதினம் இரவு ஒருவர் இறப்பது உறுதி. பின் நம் பித்தானே ஆகவேண்டும்?'' என்று பூசாரி பதிலளித் தான். ''சரி. நாளை இரவு காளி தேவி தன் சுய ரூபத்துடன் கோவிலிலிருந்து புறப்பட்டு ஊருக்குள் பிர வேசிப்பது உண்மைதானா? என்று ரங்கனாதன் மறு படியும் கேட்டான். ''இருக்கலாம், ஆனால் அதையாரும் பார்க்கக் கூடாது. பார்த்தவர் காளி கோபத்துக்கு ஆளாகி மரிப்பது திண்ணம். ஆகையால் யாரும்பார்க்கத் துணிவதில் லை.அஸ்தமித்ததும்கதவுகளைத்தாளிட்டுவிடுவதுதான்வழக் கம்'' என்ற பதில் ரங்கனாதன் மனத்தில் பெருந்திகிலை மூட்டி விட்டது. காந்திமதியை இழப்பது நிச்சயம் எனக் கவலையுற்றான்.

கோவிலைவிட்டு வெளியே வந்ததும், ''இந்தக் கதையை நான் சிறிதும் நம்பவில்லை, இருந்தாலும் நான் இதைப்பரீட் சித்துவிடுகிறேன். நீங்கள் மட்டும் ரிவால்வாருடன் நாளைய தினம் அம்மாளுடைய சமீபத்தில் தேறுதல் சொல்லிக் கொண்டு இருங்கள். எந்தக்காளி வந்தாலும் ஒருகை பார்த் துக்கொள்ளலாம்'' என்று உஸன்கான் கூறினான்.

மறுநாள் தம்பதிகள் குடியிருந்த வீட்டுக்குப் பலத்த பந் தோபஸ்து ஏற்படுத்தப்பட்டது. கிராமத் தலைவன் தனது ஆட்களுடன் வீட்டைச் சுற்றிப் பாதுகாப்பு ஏற்படுத்தினான். ஆனால் மாலை வந்து இரவு சமீபிக்கவே காந்திமதியின் மனோவேதனை தாங்கமுடியாமல் போய்விட்டது. படுக்கை

யில் சோர்ந்து விழுந்தாள். தேற்ற முடியாமல் ரங்கனா தன் தவித்தான். காவலும், ரிவால்வாரும், அவள் பயத்தை நீக்க முடியவில்லை. தனக்கு மரணம் சமீபித்து வருவதாக அவள் உணர்ந்தாள்.

மாலையிலேயே உலன்கான் வீட்டை விட்டுப் புறப்பட்டு விட்டான். கிராமத் தலைவன் கோடரி முதலிய ஆயுதங்க ளுடன் தோட்டத்தில் புதர்களுக்கிடையில் பதுங்கியிருந்தான். மற்றக் காவலாளிகள் வீட்டைச்சுற்றி இடைவெளிகொட்டாமல் நாலாபக்கமும் பார்த்துக்கொண்டிருந்தனர். வீட்டினுள் படுக்கையில் புரண்டுகொண்டிருந்தாள் காந்திமதி. அவள் பக்கத்தில் ரங்கனாதன் என்னசெய்வதென்று தெரியாமல் திகைத்துக்கொண்டிருந்தான். அவனுக்குக் கொஞ்சநஞ்சமி ருந்த மனோதைரியமும் பறக்கடிக்கப்பட்டது. உலன்கான் விறைக்க விறைக்க ஓடிவந்தான். அவன் முகத்தில் வியர்வைத் துளிகள் முத்துமுத்தாகச் சொட்டிக்கொண்டிருந்தன. "காளி கோவிலைவிட்டு வெளியேறிவிட்டான்! பூசாரி சொன்னது உண்மைதான். நான் நேரில் பார்த்தேன். என்ன பயங்கரச்சொரூபம்! இப்படியும் கடப்பதுண்டா?" என்ற பயங்கர மொழிகள் உலன்கான் வாயினின்றும் வெளிவந்தன. ரங்கனாதன் ஸ்தம்பித்துவிட்டான். காளி மனித உருவத் துடன் வெளிவருவது உண்மையானால், அவள் உயிர்ப்பலி யேற்பதும் உண்மையல்லவா? இந்த விஷயத்தை காந்திமதி யறிந்தால் அவள் உயிரே போய்விடக்கூடுமென்று அவனுக் குத் தெரிவிக்கவில்லை. ஆனாலும், கடைசி முறையாக ஒன்று பார்த்துவிடுவதென ரெங்கனாதன் தேறினான். கையில் ரிவால்வாருடன் முற்றத்துக்குச் சென்றான்.

எங்கும் நிசப்தம். எங்கும் ஒரே இருட்டு. வானத்தில் நட்சத்திரங்கள்மட்டுமே பிரகாசித்துக் கொண்டிருந்தன.

தூரத்தில் ஒரு ஒலி கேட்டது. அது சதங்கையொலி தான். காளி வந்துவிட்டாள்! அத்துடன் காந்திமதியின் முடிவும் வந்துவிட்டதேயென்று ரங்கனாதன் கலங்கினான். எல்லாரையும் எச்சரிக்கையாயிருக்கும்படி கேட்டுக்கொண் டான். சில நிமிஷநேரத்தில் தோட்டத்துக்குள் ஓர் கறுத்த உருவம் தென்பட்டது. காரிருளையும் பழித்த அவ்வுரு வம் நட்சத்திரஒளியில் மிகவும் கோரரூபத்துடன் விளங்கி யது. அதுகாளிதான். நீண்டுதொங்கும் சிவப்புநாக்கும், கையில்

சூலமும், கழுத்தில் மண்டையோட்டுமாலையும், காலில் சதங்கையும் வேறுபாரை உருவகப்படுத்தும்?

ரங்கனாதன் கைத்துப்பாக்கி அவனை அறியாமலே தானாக வெடித்தது. மறு நிமிஷம் குண்டு தேவதையின் மேல்பட்டு எதிர்பக்கத்தில் பாய்ந்தது. 'அடே மானிடப் பதரே! தேவதையை எதிர்க்கும் மானிடனுக்கு உண்டா இப்பாரில்? இதோகுடிக்கிறேன் உயிரை" என்றவார்த்தை கள் காளியின் வாயினின்றும் புறப்பட்டன. ரங்கனாதன் பிரக்ஞையற்றுக் கீழேவிழுந்தான்.

ரங்கனாதன் மீண்டும் எழுந்தபோது யாரோ தன்னை எழுப்பியதாக உணர்ந்தான். பக்கத்தில் உலன்காலும் கிராமத் தலைவனும் நின்றுகொண்டிருந்தனர். "ஓடி வாருங்கள், உங்கள் காளியின் கோலத்தை வந்துபாருங்கள்" என்று கிராமத் தலைவன் கூறினான்.

அவர்கள் குறிப்பிட்ட இடத்தில் மண்டை பிளக்கப்பட்டு 'காளிதேவதை' உயிர் நீங்கிக்கிடந்தாள். அவளது இரும் புக்கவசமும், மேலாடையும், மற்ற ஆயுதங்களும் தூரத் தில் சிதறிக்கிடந்தன. பூசாரி உருவம் மட்டுமே இரத்தவெள் ளத்தில் புரண்டு கிடந்தது. அந்தப்பூசாரி காளிவேஷம் போட்டு இப்படி எமாற்றத்துணிந்தது யாருடைய தூண்டுத லால் என்று கூறவேண்டியதில்லை. ஆனால் பூசாரியின் மண்டை பிளந்ததுதான் மிச்சம். எல்லாம் அந்தக்கிராமத் தலைவனுடைய கைவரிசைதான் காரணம். அவனுக்கு ஆதிமுதலே சந்தேகம். தோட்டத்தின் ஒருபக்கத்தில் தெய் வங்கள் அணுகாத வஸ்துக்கள் என்று நம்பப்படுகிற அசுத் தம் நிறைந்த பொருள்களைப் போட்டுவைத்திருந்தான். ஆனால் "காளிதேவதை" அப்பொருள்களைச் சமீபித்து அப்பால் தாண்டிச்சென்றதும் அவனுக்குச் சந்தேகத்தை விளக்கிவிட்டது. போட்டான் அதன் தலை மீது தன் கோட ரியை, மண்டை பிளந்தது; பூசாரியைக்காட்டிற்று.

பெரிய மனிதர்கள் இதில் சம்பந்தப்பட்டதால் விஷயம் அம்பலத்துக்கு வரவில்லை. பூசாரியின் உயிரைக்காளி குடித் துவிட்டதாக எல்லோரும் நம்பினார்கள். காந்திமதியின் பீடையும் இத்துடன் ஒழிந்தது. சுடலையாண்டியின் பூச் சாண்டியும் வெளுத்தது. இனி அடங்கியிருப்பதே நல்ல

கொள்கை வேண்டாமா?

(தி. வே. அ.)

உலகத்துத்தோன்றிய மக்கள் எல்லோருக்கும்எதோஒரு கொள்கை இருக்கவேண்டியது மிகவும் அவசியமாகும். ஏனெனில் கொள்கையில்லாதவன் வாழ்க்கை ஓரு வாழ்க்கையாகக் கருதப்பட மாட்டாது. ஓரு வேலையுமில்லாமல் வீணை தரியன் எப்படிச் சோம்பேறியாக உலகத்தாரால் இகழப்படுகின்றானோ அப்படியே கொள்கையில்லாதவனும் அறிவுடையவரால் இகழப்படுவான். தற்பொழுது எந்த ஓரு மனிதனையாவது எடுத்துக்கொள்ளுங்கள். ஒவ்வொருவனும் ஓரு கொள்கையைக் கடைப்பிடித்துக் கொண்டிருப்பான். கொள்கையால் நன்மை ஏற்பட்டாலும் தீமையேற்பட்டாலும் அக்கொள்கையை விடாப்பிடியாகப் பிடித்துக் கொண்டிருப்பான். அவ்வாறு கொள்கையில்லாமல் ஓருவன்

தென்று சங்கரனுக்கு வேறு பெண்பேசி முடித்துக்கொண்டார். இந்தப் பயங்கர பரிசோதனையிலிருந்து மீள்வதற்குள் காந்திமதியின் பலம் பெரிதும் குறைந்துவிட்டது. அவள் தேறுவதற்கு மீண்டும் ஆறுமாதகாலம் பிடித்தது— என்றுமுடித்தான் ரங்கனாதன்.

"ஆமாம்! எல்லாம் சரிதான். ஆதியில், நீ சாமியாடிகளை நம்புவதாகவல்லவா ஆரம்பித்தாய்? நீ சொன்னகதை முற்றும் கோர்மாறாக அல்லவாயிருக்கிறது? என்று கேட்டேன். "நான் சாமியாடிகளையா நம்புவதாகச் சொன்னேன்! இல்லையே! இதெல்லாம் வெறும் புரட்டு, பித்தலாட்டம், ஏமாற்றுவித்தை, வயிற்றுப்பிழைப்பு ஜாலம் என்பதையே நான் நம்புவதாகச் சொன்னேன்" என்று மறுமொழிவந்தது. கதை முடிந்தது, காரும் ஹோட்டல் வந்து சேர்ந்தது.

இருந்தால் அவன் மக்களிற் சிறந்தவனாகக் கருதப்படமாட்டான். ஒரு வழியிற் சென்றுகொண்டிருப்பவன் ஏதோ ஒரு ஊரை அடைய வேண்டுமென்று கருதிக்கொண்டுதான் செல்வானேயல்லாது மனம் போனவாறு வழியிற் சென்றுகொண்டிருக்கமாட்டான். அப்படிச் சென்றுகொண்டிருப்பானாகில் அவன் பைத்தியக்காரனாகத்தான் இருக்கவேண்டும். அதுபோலவே வாழ்க்கையையும் ஒரு லட்சியத்தைக் கருதாமல் நடத்திக்கொண்டிருப்பவனும் ஒரு பைத்தியக்காரனாகத்தான் இருக்கவேண்டும். ஆனால் ஒரு கொள்கையும் இல்லாமல் ஒருவரும் இருக்கமாட்டார் என்று முன்னமே கூறினேன். இந்தக் கொள்கைகள் எண்ணிறந்தன ஆனால் அக்கொள்கைகளினால் வருவதாகக் கருதப்படும் பலன்கள் எல்லாம் ஒரு தன்மையவாகத்தான் இருக்கும். பலவிதமான பெயர்களால் கிளைகளாகப் பிரிந்து செல்கின்ற ஆறுகள் எல்லாம் எவ்வாறு முடிவில் கடலையடைந்து ஒன்றாகின்றதோ அவ்வாறே பலவித கொள்கைகளும் முடிவில் பலனில் ஒன்றாகத்தான் இருக்கும்.

உலகத்து மக்களிடத்தில் எத்தனையோ கொள்கைகள் இருந்தாலும் அவைகள் எல்லாம் இரண்டே கொள்கையில் அடங்கி விடும் என்பதே எனது எண்ணம். அதாவது பொதுநலக்கொள்கை, சுயநலக்கொள்கை என்னும் இரண்டேயாகும். இவ்விரண்டையும் பின்னால் விவரிப்போம். எல்லாக்கொள்கையும் அனுஷ்டிப்பவர்களுக்கு நன்மையையுண்டாக்கக் கூடியனவாகவே இருத்தல் வேண்டும். அறிவாளியானாலும் பாமரனானாலும் தனக்கு நன்மையைத் தேடிக்கொள்ள முற்படுவானேயன்றி தீமையைத் தேடிக்கொள்ள ஒருநாளும் முற்பட மாட்டான். ஆனால் கொள்கையென்பது தங்களுக்கு நன்மை செய்யக் கூடியனவாயிருத்தல் வேண்டுமென்பதோடுபிறர்க்குத்தீமைசெய்யாமலும் இருத்தல் வேண்டும் என்பதே நமது எண்ணம். ஆனால் உலகத்துள் காணப்படும் கொள்கைகள் தீமை செய்கின்றனவா நன்மை செய்கின்றனவா என்பவைகளை ஆராய்ந்து பார்ப்போம். எண்ணிறந்த கொள்கைகளில் மதம் என்பதையும் ஒரு கொள்கையாகத்தான் கொள்ளவேண்டியிருக்கிறது. ஏனெனில் மதம் என்றாலும் கொள்கையென்றாலும்ஒரு பொருளைத்தான் குறிக்கின்றது. எனவேதற்கால மதங்களாகியகொள்கைகளைஆராய்ந்து பார்த்தால் தீமை தான் அதிகமாக உண்டாகின்றனவே தவிர நன்மையென்பது ஒரு சிறிதும்உண்டாவதில்லை. எல்லாமதஸ்

தரும் இறுதியில் ஒரு முடிவை எய்துவதாகப்பாவனைசெய்து கொள்கிறார்கள். ஆனால் அந்த முடிவுதான் இன்னதென்று தெரியவில்லை. இந்துமதஸ்தர்கள் முடிவில் மக்கள் அடையும் பலன் "மோக்ஷம்" அதாவது வீடு என்கின்றனர். ஆனால் அந்த வீடு என்பது இத்தகையதென்று சொல்வதற்கில்லை யாம். சிந்தையும் மொழியும் செல்லாத நிலைமைத்தாம். அதாவது மனோ வாக்குக்கு எட்டாத நிலையிலுள்ளதாம். மனத்திற்கும் வாக்கிற்கும் எட்டாத ஒன்றுஇருப்பதாகக்கனவு கண்டுகொண்டு அதற்காக முயற்சி செய்பவர்களின் அறிவை என்னென்று சொல்வது? அந்தமோக்ஷத்திற்குப்போய்என்ன செய்வது? அங்கே என்ன இருக்கின்றன? அது எத்த கையது? அங்கு நாம் போவான் ஏன்? அது இருப்பது என்பதற்கு அத்தாட்சியென்ன? என்பவைகளை நாம்யோசித் துப் பார்க்கவேண்டாமா? இவ்வாறு யோசித்துப் பார்த் தால் என்ன முடிவிற்கு வரமுடியும்? முடிவு சூன்யம்தான். இதுதான் இந்துமதஸ்தரின் முடிந்த முடிவான மோக்ஷமாக இருக்கிறது. கடைசியில் பெரிய பெரிய "புண்ணியம்" செய் தவர்களுக்குத்தான் இங்கு இடம் கிடைக்குமாம். ஏனையோ ருக்கு இது கிட்டாதாம். இன்னதென்று தெரியாத—இன்ன தன்மைத்தென உணர்ந்துகொள்ள முடியாத ஒருஇடம் இருப் பதாகவும் அதுவும் பெரிய 'தவம்' செய்தவர்க்கே கிட்டுவதா கவும் கூறப்படும் இந்த மோக்ஷத்தைத்தவிர இன் னும் கீழான பதவியும் இருக்கிறதாம். அதுதான் சுவர்க்க மாம். அங்கே பலவிதமான இன்பங்களையனுபவிக்கலா மாம். எப்பொழுதும் இளமையோடிருக்கலாமாம். அங் குள்ள அழுதையுண்டால் நரை, திரை, மூப்புச் சாக்காடு கிடையாதாம். இன்னும் எத்தனையோவித இன்பங்களும் பலன்களும் இருப்பதாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது. இது சாதாரணமான "புண்ணியம்" செய்பவர்களுக்குக் கிடைக் கும் பதவியாம். இதனை முற்றும் துறந்த முனிவர்களும் ஞானிகளும் விரும்பமாட்டார்களாம். அவர்களுக்கு இது அற்பமான பொருளாம். ஏனெனில் இவ்வாசை மீண்டும்பிற விக்கு வித்தாகுமாம். இதுதான் இந்துமதஸ்தரின் இரண்டா வது பதவி. முதற்பதவியோ நமக்கொன்றும் உணரக் கூடியதாயில்லை. இரண்டாவது பதவியோ வெறும் சுகங்க ளையுடையதாக இருக்கிறது. ஒரு மனிதன் எப்பொழுதும் சுகத்தையே அனுபவித்துக் கொண்டிருந்தால் கஷ்டம் ஒன்று இருப்பதாக அறியமுடியாதே? நிழலின் அருமை வெயிலிற் போனால்தான் தெரியுமென்பது

போல கஷ்டத்தை அனுபவித்தாலல்லவோ இன்பத்தை இன்ப மென்று உணரமுடியும்? அன்றியும் சுகத்திலே முழுகிக் கொண்டிருந்தால் அது அவனுக்குச் சலித்துவிடாதா? ஆசை அறுபது நாள், மோகம் முப்பது நாள் என்றும் கூறுகிறார் களே; பழகப்பழகப்பாலும் புளிக்குமென்றும் கூறுகிறார் களே! உண்டி, உடை முதலியவைகளை பலவிதமாக மாற் றிக் கொள்வது ஒரேவிதத்திலுள்ள வெறுப்பினாலல்லவா? அப்படியிருக்க, எப்பொழுதும் இன்பத்தையே அனுபவித் துக் கொண்டிருப்பதானால் அதனுக்குச் சலிப்பு ஏற்படாதா? ஓய்வு வேண்டாமா? என்பவைகளை யோசித்துப் பார்த்தால் பகுத்தறிவுடைய எவருக்கும் இந்தச் 'சுவர்க்கம்' வேண்டவே வேண்டாமென்று தான் தோன்றும். நிற்க,

உலக வாழ்க்கையிலேயே மனிதன் உணவருந்த வேண் டிய அவசியமில்லாமற் படைக்கப் பட்டிருப்பானாகில் உலக நிலைமையை நம்மால் எவ்வாறு சொல்ல முடியும்? அப்போது உலகம் மக்கள் எதிர்நோக்கும் உலகமாகவே தோன்றா தென்பதோடு கொள்கையுமின்றி செயலுமின்றி இன்ன நிலையிலிருக்குமென்று கூற முடியாதன்றோ. எனவே அத்தகைய இவ்வுலக வாழ்க்கை வேண்டுமென்று அறிவுடைய மக்கள் ஒருக்காலும் விரும்பமாட்டார்கள். ஆகையால் இந்த மதங்களாகிய கொள்கைகளும் அவற்றால் உண்டாகும் பலன்களும் நமக்கு வேண்டவே வேண்டாம். ஆனால் நமக்கு வேண்டிய கொள்கை என்ன வென்றால் முதலில் சொல்லிய பொது நலக்கொள்கை, சுயநலக் கொள்கையென்ற வாழ்க்கையின் இலட்சியக் கொள் கைகளில் முதலாவதான பொது நலக்கொள்கையே ஆகும். ஆனால் இவ்விரண்டின் இயல்புகளென்னவென்றால் முத லாவதான பொது நலக் கொள்கையென்பது மக்களில் உயர்வு தாழ்வில்லை; ஆண்கள் பெண்களில் உயர்வு தாழ்வு கிடை யாது; எல்லா மக்களும் ஒரே தாயின் புதல்வர்; தொழி லால் ஏற்றத்தாழ்வு கிடையாது; மக்கள் பகைமை கூடாது; வேற்றுமை கூடாது; கோயில் அவசியமில்லை; தீர்த்தயாத் திரை அவசியமில்லை; நோன்புகள் கொண்டாடவேண்டுவ தில்லை; திருவிழாக்கள் வேண்டுவதில்லை; நம்முள் அர்த்தமற்ற மூடப்பழக்கவழக்கங்கள் வேண்டாம்; எந்தக் காரியமானாலும் அறிவுக்குப் பொருந்தியதோடு நமக்கும் பிறர்க்கும் நலம் தருபவைகளாயிருந்தால் செய்யலாம்; தீமை செய்பவைகளாயிருந்தால் எந்தச் செய்கையாயிருந்

தாலும் செய்யக் கூடாது. உண்மையே பேசுவோம்; உண்மையாகவே உழைப்போம்; களவு, வஞ்சனை, சூது என் பவைகளைக் கனவிலும் கருதோம்; எல்லா மக்களும் நலம் பெறவேண்டும்; பிறனுக் குற்ற துன்பம்நமக்குற்றதாகவே யெண்ணி வேண்டியன செய்வோம்; மனத்தாலும் வாக்காலும் தேகத்தாலும் செய்யப்படுகின்றகுற்றங்களை யெல்லாம் எக்காலத்திலும் செய்ய மாட்டோம்; நாங்கள் இருக்கும் வரை இருப்போம்; காலம் முடியின் இறப்போம்; இறப்பைப் பற்றி அஞ்சுவதில்லை; அது இயற்கையென்று துணிவுடனும் உண்மையுடனும் மகிழ்ச்சியுடனும் வாழ்வதாகும். இந்தக் கொள்கையே உயர் கொள்கை; இந்தக் கொள்கையே உண்மைக் கொள்கை; இந்தக் கொள்கையே நமக்கு வேண்டியது; இன்றியமையாதது. இந்தக் கொள்கை இல்லாதவன் அறிவுள்ள மனிதனாகக் கருதப்பட்டான்; இதுவே உலக மக்கள் அனைவராலும் கைக்கொள்ள வேண்டிய பகுத்தறிவுக் கொள்கையாகும்.

இனி இரண்டாவதான சுயநலக் கொள்கை யென்பதனைப் பற்றிச்சிறிது ஆராய்வோம்.

சுயநலக்காரர்கள், தாங்கள் மட்டும் சுகித்திருக்கவேண்டுமென்றும், தாங்கள் மட்டும் செல்வவான்களாக இருக்கவேண்டுமென்றும் அதற்காகப் பிறரை ஏமாற்றியோ, வஞ்சித்தோ தீய காரியங்களையும் செய்யலாமென்றும் தீய காரியங்களைச் செய்தால் அவற்றால் வரும் பாவத்தைப்போக்குவதற்காகவிரதங்களையும் கோன்புகளையும் அனுஷ்டிக்கவேண்டுமென்றும்கருதுவதே அக்கொள்கையாகும். இந்தக் கொள்கையைக் கொண்டவர்கள் தங்கள் நலனைக் கவனிப்பதுஒன்றையே குறிக் கோளாகக் கொண்டு பிறர் நலனை ஒரு சிறிதும் சிந்திப்பதில்லை. தங்களால் இயன்ற உதவிகளைப் பிறருக்குச் செய்யா விடினும் தீமையாவது செய்யாதிருத்தல் வேண்டும். அங்ஙன மின்றித்தங்களுக்கு ஒரு காரியம் நன்மை தருவதாயின் அந்தக் காரியம் பிறருக்கு எத்தகைய தீமையைத் தருவதாயினும் செய்தே தீருவார்கள். இத்தகைய மக்களுக்குத் தான் சட்டமும் தண்டனையும் அப்ராதங்களும் இன்றியமையாதனவாயிருக்கின்றன. இத்தகையவர்களைக்கருதித்தான் வள்ளுவரும்,

"அச்சமே கீழ்களதாசாரம் எச்சம், அவாவுண்டேலுண்டாஞ் சிறிது" என்று கூறியிருக்கிறார் போலும். அதா

பிள்ளை பெறுவது கடவுளாலா?

(பாரதிதாஸன்)

"கடவுள் சிருஷ்டிக்கிறார்; எல்லாவற்றையும். எல்லாம் எப்போதும் கடவுளால் சிருஷ்டிக்கப்படுகின்றன" என்கிறாய் தோழா! உன் வீட்டில் தேற்றுப் பிறந்த குழந்தையையும் அவர்தான் சிருஷ்டித்தார். எவை உன் கண், காது முதலிய வற்றிற்குப்புலனாகி விட்டனவோ அவைகளெல்லாம் "கடவுள் சிருஷ்டி" என்று கண்ணை மூடிக்கொண்டு எழுதிவிடலாம். ஆனால் நீ ஒரு விஷயத்தில் தவறிவிடாதே! ஒன்று தோன்றிய பின்புதான் அது "கடவுள் சிருஷ்டி"! தோன்றாத முன்பு

வது கீழ் மக்களிடத்தில்—பாமரர்களிடத்தில் கல்லா ஒழுக்கம் காணப்பட்டதாயின் அதற்குக்காரணம், அரசனால் தண்டனை வருமென்ற பயமே யாகும். மற்றும் தங்களால் விரும்பப்படும் பொருள்கள் அக் கல்லொழுக்கத்தினால் உண்டாகுமானால் அதனாலும் அவ்வொழுக்கம் அவர்களிடத்தில்சிறிது காணப்படுமென்பதாகும். ஆகவே இத்தகைய கீழ்த்தரக் கொள்கை அழிய வேண்டுமானால் கல்வியறிவு எல்லா மக்களிடையிலும் பரவ வேண்டும். ஆனால் கல்வியறிவு பரவுதலினால் மட்டும் இக் குறைகளைப் போக்க முடியாது. பகுத்தறிவுக் கொள்கை ஒவ்வொருவர் உள்ளத்தும் பதிய வேண்டும். இப்பகுத்தறிவுக் கொள்கை வளர்ச்சி பெறாவிட்டால் கல்வியறிவு பெற்றாலும் முற்றிலும் கருதிய பல னையடைய முடியாது. ஆகையால் நாமனைவரும் எல்லா மக்களும் நலமடைதலைவிரும்பும் பொதுநலக் கொள் கையை ஆதரிப்போமாக.

அது தோன்றுவதற்கு முன்னறிவிப்பு, கடவுள் சிருஷ்டியில் இல்லை. தோற்றுவிக்குமுன் தெரிவிக்கவேண்டியது கடவுள் பொறுப்பாயிருந்தால், அதைத்தோற்றுவிக்கக் காரணத்தைச் சொல்லவேண்டிய பொறுப்பும் கடவுளுக்கு ஏற்பட்டு விடும். அதன் பிறகு கடவுள் ஏற்பாட்டின் குட்டு வெளிவந்துவிடக் கூடுமல்லவா?

உன் வீட்டில் பிறந்த குழந்தை கடவுளால் சிருஷ்டிக்கப் பட்டது என்று மேலே சொன்னேனல்லவா? நீயும் ஆம் என்று நம்பினாய்.

ஆகவே உன் வீட்டில் பிரசவ அறையில் கடவுளால் ஒரு குழந்தை சிருஷ்டிக்கப்பட்டதல்லவா? முதன்முதல் உன் வீட்டில் பிரசவ அறையில் உன் குழந்தையைக் கண்டாய். அதை உன் மனைவியின் அண்டையில்தான் பார்த்தாய். அப்பிள்ளையை ஈன்றவள் யார் என்பதை நீயறிவாய். அவள் அதை ஈன்றெடுக்க உனது சம்பந்தம் இருந்தது என்பதையும் நன்றாய் அறிவாய்! ஆயினும் அக்குழந்தையை உண்டாக்கியவர் மாத்திரம் கடவுள் என்பதுதான் உனது நம்பிக்கை. சந்தோஷந்தான்! உன்னுடைய இந்த நம்பிக்கை எந்தச்சந்தர்ப்பத்திலும் மாறாதிருக்கவேண்டும். ஆனால் அதே பிரசவ அறையில் இன்னொரு நாள் தகவலில்லாமல் இன்னொரு பிள்ளையை நீ கண்டாயானால், அது மற்றொருவன் பெற்றதென்றும், வளர்க்க முடியாமல் அவன் என் தலையில் கட்ட நினைத்திருக்கிறான் என்றும், நான் இதைப் பெறவில்லை என்றும் நீ சொல்வாய் என்பதிற் சந்தேகம் இல்லை. இது மாத்திரமா? கடவுள் என்பதாக ஒன்று வந்து உன் காதில் அந்தப் பிள்ளை "நமது சிருஷ்டி ஆகையால், அதை நீ ஒப்புக் கொள்" என்று சொன்னாலும் முடியாது முடியாது; அது நான் பெற்றதல்ல; நான் பெற்றது எனக்கிருக்கிறது என்றுதான் சொல்லுவாய் என நம்புகிறேன். ஆனால் அந்தச் சந்தர்ப்பத்தில் நீ அப்படிச் சொல்லுவது சரியாக இருக்கலாம். ஏனென்றால், உன்னால் ஏற்பட்ட பிள்ளைக்கு உன் சொத்துச் சேரவேண்டியதும், உன் பிள்ளைக்காக நீ உழைப்பதில்

நீ குஷால் அடைவதும் ஞாயம். ஆனால் ஒன்று! நீயும் உன் மனைவியும் உண்டாக்கிய உனது பிள்ளை, கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டது என்று நீ, முன், நம்பியதானது இவ் விடத்தில் ஆட்டங் கொடுக்க வில்லையா? ஆனால், ஊன் சொத்து ஸ்வாதீனம் ஆகிய நன்மையைப் பாதிக்காத முறை யில் மேலோடு உன் பிள்ளையைக் "கடவுள் சிருஷ்டி" என்று நீ சொல்வதில் உனக்கு ஒன்றும் ஆக்ஷேபணையில்லை.

நீயும், உன் மனைவியும் உண்டாக்கிய பிள்ளையைக் கட வுள் உண்டாக்கியது என்று நீ தங்கு தடையின்றிக் கூறு வதற்குப் பிரதான காரணம் ஒன்றுண்டு. நீ தந்த பிள்ளையை இன்னொருவன் தந்தான் என்று இன்னோர் அறிந்த மனிதனைக் குறிக்கும்போது உனக்குக் கோபம் பொங்குவதும், அதை நீ மறுக்க முற்படுவதும் ஞாயம்! ஆனால் "கடவுள் தந்தார் இந்தப் பிள்ளையை" என்று அறி யாததான ஒரு கடவுளைப் பற்றிக் கூறுவதால் கோபமில்லை; நீ அதை மறுக்க முற்படவேண்டுவதில்லை. ஏன்! கடவுள் என்பது க—ட—வு—ள் என்பது மாத்திரமே என்பது உனக் குத் தெரியும். ஓரே ஒரு வார்த்தை! எதையும் படைத்த கடவுள், மக்களைப் படைத்த கடவுள், உன் பிள்ளையைப் படைத்த கடவுள்; சொன்னாலும், சொல்லாவிட்டாலும் சக லத்தையும் சிருஷ்டித்துக்கொண்டே யிருக்கும் கடவுள் இருக் கிறாரல்லவா? அவர், நீயும், உனது மனைவியும் சம்மந்தமற் றிருக்கும் காலத்திற் கிடையில் உன் வீட்டுப் பிரசவ அறை யில் ஒரு பிள்ளையைச் சிருஷ்டித்துப் போட்டு விடுவாரேயா னால் அதே நேரத்தில் என்னைக் கூப்பிடு; அப்போது தான் 'கடவுள் சிருஷ்டியா" என்ற தொடர்மொழிக்கு அர்த்தம். கடவுள் மனிதரின் சிருஷ்டியா, மனிதர் கடவுளின் சிருஷ்டி யா என்ற இரண்டிலொன்றை நான் நிச்சயித்துவிட உத்தே சம்.

"அடே குட்டிச்சுவரே அரைக்கழுதை வயதாகி இன்னம் சாமிவிளையாட்டா?"

நமது சின்னஞ் சிறு குழந்தைகள் "சாமி" வைத்துவிளையாடுவதைப் பார்த்திருக்கிறோம். சிறு கற்களை இரண்டு வரிசையாக அடுக்கி அதன் மேல் குச்சிகளைப் பரப்பி, அதற்கு மேல் துணி, இலை, காகிதம் முதலியவைகளைப் போட்டு மூடி, ஓர் அறை மாதிரியாகச் செய்வார்கள். அதன் பிறகு சிறு ஓடுகளை முக்கோணமாகத் தேய்த்தோ அல்லது பொம்மைகளையோ அவ்வறைகளுக்குள் "சாமி"களாக வைத்து, ஒரு குழந்தை அர்ச்சகராகவும், மற்றக் குழந்தைகள் "பக்தர்"களாகவும் நடிப்பதுண்டு. இதுதான் குழந்தைகளினுடைய கோயில்கள். இவைகளுக்குத் திருவிழாக்களும் உண்டு. சிறு காய்களில் துளைப்பக் குச்சிகளைக் கோர்த்து தேர்மாதிரி செய்து அடியில் குச்சிகளைப் பரப்பி அதன் மேல் முக்கோணமாய்த் தேய்க்கப்பட்ட ஓட்டுத்துண்டை வைத்து, இழுத்துக்கொண்டு போவது உண்டு. அந்தக் கூட்டத்தில் மிகவும் சிறு குழந்தையாய் இருப்பவர்கள் ஓட்டைத் தகரங்களை "மேள"மாக உபயோகப்படுத்துவார்கள். "இந்துக்கள்" என்றும், "சைவர்கள்" "வைஷ்ணவர்கள்" என்றும் சொல்லிக்கொள்ளும் எல்லாருடைய வீடுகளிலும் பெரும்பாலும் குழந்தைகள் இவ்வாறு விளையாடுவது உண்டு. ஆனால் இப்போது பட்டணங்களிலுள்ள 'இந்து'க் குழந்தைகள் இவ்வாறான விளையாட்டு விளையாடுவது கிடையாது. அவர்கள் பட்டண வாழ்க்கையில் அதிகமாய்க் காணப்படும் மோட்டார், ரயில் முதலியவைகள் மாதிரி வைத்துவிளையாடுகிறார்கள். ஏனெனில் கிராமத்துக் குழந்தைகளுக்கு கடவுளின் மேலிருக்கும் அவ்வளவு "பக்தி" பட்டணத்துக் குழந்தைகளுக்கு இருக்கச் சந்தர்ப்பம் கிடையாதல்லவா? "சாமி" வைத்து விளையாடும் குழந்தைகள், பெரியோர்களாகிய நாம் செய்வதைப்பார்த்துத்தான் செய்

கின்றன. ஆனாலும் அக்குழந்தைகள் விளையாடுவதை ஓரளவுதான் நாம் பொறுத்துக் கொண்டிருக்கிறோம். பொறுத்துக் கொள்ளவும் முடிகிறது. உதாரணமாக, மிகவும் "செல்ல"ப்பிள்ளையாய் வளரும் ஒரு குழந்தையை 6முதல் 8 அல்லது 10 வது வயது வரை "சாமி" வைத்து விளையாடுவதைப் பொறுத்துக்கொண்டிருப்போம். சாதாரணமாக 3 வயது முதல் 6 வயது வரையில்தான் இவ்வித விளையாட்டுகளுக்கு மதிப்பும் இருக்கும். அதுவும்கூட ஓர் அளவு வரையில்தான். 7 வயதுக் குழந்தை "சாமி" விளையாடுவற்காக பள்ளிச் சம்பளத்துக்கு வைத்திருக்கும் பணத்தை எடுத்துக் கற்பூரமும் கலர் காகிதமும் வாங்கினால், கன்னத்தில் ஒரு அறை கொடுத்துக் காதைப்பிடித்து இழுத்து அப்புறம் விடுவதைப் பார்த்திருக்கிறோம். அல்லது 13 வயதுப் பையன் "சாமி" விளையாட ஆரம்பிப்பதைக் கண்டோமானால், "அடே, குட்டிச்சுவரே அரைக்கழுதை வயதாகி இன்னம் சாமி வைத்து விளையாட வெட்கமில்லையா? என்று கடுத்த முகத்தோடு கேட்கிறோம். அதையும் மீறிச்செய்தால் அக்குழந்தைகள் சிறு சிறைச்சாலை வாழ்க்கையைக் கூட அநுபவிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டு விடுகிறது. இச்சிறு அனுபவம் எல்லாருக்கும் தெரிந்ததுதான்.

ஆனால், மேலே சொன்ன எல்லா விஷயங்களிலும் அக்குழந்தைகளே நம்மைத் திருப்பிக் கேட்குமாகில் நாம் என்ன சொல்வோம்? அவர்களை "அடே அதிகப் பிரசங்கி" என்பது தவிர உண்மையானபதில் ஏதாவது நம்மால் சொல்ல முடியுமா என்பதை யோசித்துப் பாருங்கள்.

வருஷா வருஷம் நமது நாட்டில் நூற்றுக்கணக்காக கோயில்களும் தேர்களும் கட்டப்பட்டு, ஆயிரக்கணக்கான உத்ஸவங்களும் நடைபெற்று வருகின்றன. ஒவ்வொரு திருவிழாவுக்கும் லட்சக்கணக்கான ஜனங்கள் போய்க் கொண்டே இருந்தால், இன்னும் சில வருஷங்களில் இந்தியாவினுடைய செல்வமெல்லாம் குட்டிச் சுவர்களிலும், குழவிக் கற்களிலும் குடை பீதாம்பரங்களிலும் தான் இருக்குமே யொழிய ஜனங்களுக்குப் பிரயோஜனப்படக் கூடிய முறையில் ஒரு தம்பிடி கூட இருக்காது என்பது திண்ணம்! இன்னும், மதுரை, திருநெல்வேலி, திருவாரூர், சீரங்கம், திருச்செந்தூர், திருவானைக்காவல் முதலிய ஊர்களில் ஜனங்க

ளுக்கு வீடு கட்டிக் கொள்ளக் கூட இடமில்லாதபடி சரிபாதி ஊரைக் கோவில் அடைத்துக் கொண்டிருக்கிறது. உயிரில்லாச் சாமி ஒன்றுக்கும், உயிருற்ற "சாமிகள்" தோசை, வடை, புளியோதரையை விழுங்கி விட்டு ஜட்காவண்டிக் குதிரை புரளுவது மாதிரி நெளிந்து கொண்டு ஏப்பம் விட்டு மல்லாந்து கிடப்பதற்கு மாத்திரம் ஊரில் பாதியை அடைத்துக் கோவில் கட்டினால் நமது புத்திசாலித் தனத்தைக் கண்டு மேல் நாட்டுப் பெண்மணிகள் புஸ்தகம் எழுதாமல் வேறு என்ன செய்வார்கள்?

நமக்கும் குட்டிச் சுவர் மாதிரி 5 கழுதை வயது ஆயிற்றே பொழிய, "சாமி" விளையாட்டுமாத்திரம்போகவே இல்லை. திருப்பதி போகலாமா, திருச்செந்தூர் போகலாமா என்பதும், காசி போய் விட்டு ராமேஸ்வரம் போகலாமா, அல்லது ராமேஸ்வரம் போய் விட்டுக் காசி போகலாமா வென்பதும், அநுமார் வாகனத்திற்குத் தங்கமுலாம் பூசலாமா அல்லது தங்கத் தகட்டினாலேயே செய்து விடலாமா என்பதும், ஜம்புகேஸ்வரருக்குப் பூச்சக்கரக் குடை செய்வதற்குப் பட்டு விசேஷமா, வெல்வட் விசேஷமா என்பதும், மாரியம்மனுக்கு வெள்ளியில் கண்கவசம் செய்யலாமா தங்கத்தில் செய்யலாமா, கல்யாண உற்சவம் வருஷத்துக்கு இரண்டு தடவை நடத்தலாமா என்பதுமே பெரிய ஆராய்ச்சியாயிருக்கிறதேதவிர, நமது நித்திய வாழ்க்கைக்குச் சௌகரியமான ஏற்பாடுகளைச் செய்வதில் நமது யுத்தியானது சிறு பிள்ளைகளை விட ஆயிர மடங்கு கீழாகவே தான் இருக்கிறது. போன வருஷம் நடந்த கல்யாணம் என்ன ஆயிற்று? எந்த கோர்ட்டில் ரத்து ஆயிற்று? அல்லது ஓடிப்போயிற்றா? தம் பதிகளில் ஏதாவது ஒன்று செத்துப்போயிற்றா என்று யோசிப்பதில்லை.

பள்ளிக்கூடத்துச் சம்பளத்தை யெடுத்துக் கற்பூரம் வாங்கி தன் "சாமி"க்குக் கொளுத்தும் பிள்ளையாண்டானுக்கும், ஆஸ்பத்திரி, கல்விச்சாலை, சுகாதாரம் முதலியவைகளுக்குப் பணமே இல்லாமலிருக்கும்போது, பெரிய தொகை

யைச் செலவு செய்து, "சாமி" விளையாட்டு விளையாடும் பெரியோர்களுக்கும் புத்தி சம்பந்தப்பட்ட மட்டில், ஏதேனும் வித்தியாசமிருக்கிறதா என்பதை வாசகர்களே யோசித்துப் பார்க்கட்டும்.

இவ்வுலக வாழ்விற்கு அவசியமான கல்வியையும், அதன் பிறகு தெரிய வேண்டிய பல விஷயங்களையும் கற்றுக் கொள்ள வேண்டிய வயதில் "சாமி" வைத்து விளையாடுவதும், அதுவும் வீட்டுப்பணத்தைச் செலவழிப்பதும் அறிவீன மென்றும் அதைத் தடுக்காவிட்டால் பிள்ளையாண்டான் கெட்டுப்போவதோடு குடும்பத்துக்கும் கெடுதியுண்டாகும் என்றும் பெற்றோர்கள் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அதுபோலவே, நமது உலக முன்னேற்றத்தில் ஈடுபடவும், நமது வாழ்க்கையைச் சீர்ப்படுத்திக் கொள்ளவும், அதற்கு வேண்டிய முயற்சிகளைப் பல துறைகளிலும் செய்யவும் வேண்டிய காலத்தில், நமது பெரியோர்கள் "சாமி" வைத்து விளையாடுவதும் அதற்காக கோடிக் கணக்கான ரூபாய்களைச் செலவழிப்பதும், நமது மக்களைச் சோம்பேறிகளாக்கி விடுவதோடு, நமது நாட்டையும் பாழ்படுத்தி விடும் என்ற கவலையால் தான், நாமும் நமது பெரியோர்களுக்குப் புத்தி கூற வேண்டியது கடமையாகின்றது. பெற்றோருக்கு அடங்காப்பிள்ளை "சாமி" விளையாடிக்கொண்டே இருந்து வீணாய்ப் போவதுண்டு. ஆனால் தைரியமுள்ள பெற்றோர் தமது பிள்ளையைக் கெடுக்க விரும்புவதில்லை. அறைக்குள் கட்டிப்போட்டாவது புத்தி புகட்டுவது வழக்கம். அவ்வாறே "அறிவியக்கத்தார்"களாகிய சுயமரியாதை இயக்கத்தவர்களுக்கும், சந்தர்ப்பமும், சௌரியமும் கிடைக்குமானால் மேல்கண்ட முறையை கையாண்டாவது நமது பக்தர்களுக்குப் புத்தி புகட்டாமல் இருக்கப் போவதில்லை. ஆனால் அதற்குள்ளாக, நமது "பெரியோர்களும்" "பக்தர்களும்" நல்ல பிள்ளைகளாக ஆகிவிட வேண்டும் என்பதே நமது கோரிக்கை.

சாமியும், சமயமும்,
சமயாச்சாரியார்களும்.

(ஈ. வெ. ரா.)

தேவர்கள் என்றும் தெய்வங்கள் என்றும் அவதார மென்றும் ரூபமென்றும் அதற்காக மதமென்றும் சமயமென்றும் அதற்காக மதாச்சாரியர்கள் என்றும் அதற்கு சமயாச்சாரியர்கள் என்றும் கட்டியழுபவர்கள் ஒன்றா வயிற்றுப்பிழைப்பு புரட்டர்களாயிருக்க வேண்டும், அல்லது பகுத்தறிவில்லாதவர்களாகவாவது இருக்க வேண்டும் என்பதே நமது அபிப்பிராயம் என்பதாக பல தடவைகளில் வெளிப்படுத்தி இருக்கின்றோம்.

அது போலவே சிவன் என்றோ, விஷ்ணு என்றோ, பிரம்மா என்றோ சொல்லப்படுபவையும் ஒரு "சாமி" என்றோ, அல்லது ஒரு ஆசாமி என்றோ, அல்லது ஒரு உருவமென்றோ கொள்ளுவதும் ஞானமற்றவர்களின் கொள்கையென்றே சொல்லுவோம்.

உலகத்தோற்றமும், அதில் தடைபெறும் உற்பத்தி, வாழ்வு, அழிவு என்பவைகளான மூவகைத் தன்மைகளையும், மேற்படி "சாமி"களோ ஆசாமிகளோ ஒவ்வொரு தன்மையை ஒவ்வொரு ஆசாமி நடத்துகிறான் என்றோ, அல்லது ஒவ்வொரு தன்மைக்கு ஒவ்வொரு ஆசாமி பொறுப்பாளியாய் இருக்கின்றான் என்றோ நினைத்துக் கொண்டிருப்பவர்களும் விசார ஞானமற்றவர்கள் என்றே சொல்லுவோம்.

மற்றபடி மேல்கண்ட ஒவ்வொரு தன்மைக்கு மேல் கண்ட ஒவ்வொரு பெயர் வைக்கப்பட்டிருக்கின்றது என்றும், அது ஒரு உருவமல்ல, ஒரு உருப்படி அல்ல என்றும், உற்பத்தி, வாழ்வு, அழிவு என்னும் தன்மையையும் அத்தன்மைக்கு ஆதாரமான தோற்றங்களைத் தான் கடவுள் என்றோ, தெய்வம் என்றோ, சாமி என்றோ, ஆண்டவன்

என்றோ கருதுகிறோம் என்பதாகவும், தானாகத் தோன்றிற்று, தானாக வாழ்ந்தது, தானாக அழிகின்றது என்கின்ற யாவும் இயற்கை தான் என்றும், அவ்வியற்கைக்குத் தான் கடவுள், ஆண்டவன், சாமி, தெய்வம் என்று சொல்லுகின்றோம் என்பதாகவும், மற்றும் இவ்வியற்கைத் தோற்றங்களுக்கு ஏதாவது ஒரு காரணமோ அல்லது ஒரு சக்தியோ இருக்க வேண்டுமே என்றும், அந்தகாரணத்திற்கோ சக்திக்கோ தான் கடவுள், சாமி, ஆண்டவன், தெய்வம் என்கின்ற பெயர் கொடுக்கப் பட்டிருக்கின்றது என்பதாகவும் சொல்லிக்கொண்டு மாத்திரம் இருப்பவர்களிடத்தில் நமக்கு இப்போது அவ்வளவாக தகராறு இல்லை என்று சொல்லிக்கொள்ளுகின்றோம்.

ஆனால் அந்தக்கடவுளுக்கு கண், மூக்கு, வாய், கை, கால், தலை, பெயர், ஆண் பெண் தன்மை, பெண்ஜாதி புருஷன், குழந்தை குட்டி, தாய் தகப்பன் முதலியவைகளை கற்பித்து, அதனிடத்தில் பத்தி செய்ய வேண்டும் என்றும் அதற்கு கோயில் கட்டி கும்பாபிஷேகம் செய்து தினம் பல வேளை பூஜை செய்யவேண்டும் என்றும் அச்சாமிகளுக்கு கல்யாணம் முதலியவைகள் செய்வதோடு அந்தக் கடவுள் அப்படிச் செய்தார், இந்தக்கடவுள் இப்படிச் செய்தார் என்பதான "திருவிளையாடல்கள்" முதலியவைகள் செய்து காட்ட வருஷா வருஷம் உற்சவம் செய்யவேண்டும் என்றும், அக்கடவுள்களின் பெருமையைப் பற்றியும் திருவிளையாடல்களைப்பற்றியும் பாட வேண்டும் என்றும், அப்பாடல்களை 'வேதமாக' 'திருமுறையாக' 'பிரபந்தமாக' கடவுள் உண்டு என்பதற்கு ஆதாரமாகக்கொள்ள வேண்டும் என்றும், அப்பாடல்களை பாடினவர்களை 'சமயாச்சாரியர்'களாக 'ஆழ்வார்'களாக 'சமயகுரவர்'களாக 'நாயன்மார்'களாக பல அற்புதங்கள் செய்தவர்களாகக் கொள்ள வேண்டும் என்றும், இது போன்ற இன்னும் பல செய்தால் அக்கடவுள்கள் நமது இச்சைகளை நிறைவேற்றுவார்கள் என்றும், மற்றும் நாம் செய்த—செய்கின்ற—செய்யப்போகின்ற எவ்வித அக்கிரமங்களையும் அயோக்கியத்தனங்களையும் கொடுமைகளையும் மன்னிப்பார் என்றும் சொல்லப்படுபவைகளான மூடநம்பிக்கையும் வயிற்றுப்பிழைப்பு சுயநலப்பிரசாரமும் ஒழியவேண்டுமென்பதுதான் நமது கவலை. ஏனெனில் இந்நாட்டில் பார்ப்பன ஆதிக்கத்திற்கும், மக்களை மக்கள் ஏமாற்றிக் கொடுமைப்படுத்துவதற்கும், மற்ற நாட்டார்கள் போல்

நம் நாட்டு மக்களுக்கு பகுத்தறிவு விசாலப்பட்டு மற்ற நாட்டார்களைப் போல விஞ்ஞான (சையன்ஸ்) சாஸ்திரத்திலே முன்னேற்றமடையாமல் இருப்பதற்கும், அந்நிய ஆட்சிக் கொடுமையிலிருந்து தப்பமுடியாமல் வைத்த பஞ்சைச் சும க்க முதுகைக் குனிந்து கொடுத்துக்கொண்டிருப்பதற்கும் இம்மூடநம்பிக்கையும் சில சுயநலமிகளின் வயிற்றுச்சோற் றுப் பிரசாரமும் இவைகளினால் ஏற்பட்ட கண்மூடி வழக் கங்களும் செலவுகளுமே தான் காரணங்கள் என்பதாக நாம் முடிவு செய்து கொண்டிருக்கின்றோம். நாமும் நமது நாடும் அடிமைப் பட்டுக்கிடப்பதற்கும், ஒருவரையொருவர் உயர்வு தாழ்வு கற்பித்துக் கொடுமைப் படுத்தி ஒற்றுமையில்லாமல் செய்திருப்பதற்கும், மக்கள்பாடுபட்டுச் சம்பாதிக்கும் பொருள் கள் எல்லாம் நாட்டின் முன்னேற்றத்திற்கு பயன்படாமல் பா ழாவதற்கும், மக்களின் அறிவு வளர்ச்சி கட்டுப்பட்டுக் கிடப் பதற்கும், சிறப்பாக மக்களின் ஒழுக்கங்கள் குன்றிமக்களிடத் தில் மக்களுக்கு அன்பும், உபகாரமும் இல்லாமல் இருப்பதற் கும் மேல்கண்ட கொள்கைகள் கொண்ட கடவுள் என்பதும், அதன்சமயமும் சமயாச்சாரியர்கள்என்பவர்களும்அவர்களது பாடல்களும் நெறிகளுமே முக்கிய காரணம் என்பதைத் தாக்கு மேடையிலிருந்தும் சொல்லத் தயாராயிருக்கின் றோம்.

நிற்க, இக்கடவுள்களின் பொருட்டாக நம்நாட்டில் பூசை க்கும், அபிஷேகத்திற்கும், அவற்றின் கல்யாணம் முதலிய உற்சவத்திற்கும், பஜனை முதலிய காலக்ஷேபத்திற்கும், இக்கடவுள்களைப்பற்றிய சமயங்களுக்காக மடங்களுக்கும், மடாதிபதிகளுக்கும், மூர்த்தி ஸ்தலம், தீர்த்தஸ்தலம் முத லிய யாத்திரைகளுக்கும், இக்கடவுள்களின் அவதார மகி மைகளையும் திருவிளையாடல்களையும் இக் கடவுள்களைப் பற்றிப்பாடின பாட்டுக்களையும் அச்சடித்து விற்கும் புஸ்த கங்களையும் வாங்குவதற்கும், மற்றும் இவைகளுக்காகச் செலவாகும் பொருள்களிலும் நேரங்களிலும் நம் ஒரு நாட்டில் மாத்திரம் சுமார் இருபது கோடி ரூபாய்களுக்குக் குறைவில்லாமல் வருஷா வருஷம் பாழாகிக்கொண்டு வருகின் றன என்று சொல்லுவது மிகையாது.

இவ்விருபது கோடி ரூபாய்கள் இம்மாதிரியாக பாழுக்கி றைக்காமல், மக்களின் கல்விக்கோ, அறிவு வளர்ச்சிக்கோ, விஞ்ஞான (சையன்ஸ்) வளர்ச்சிக்கோ, தொழில் வளர்ச்

சிக்கோ செலவாகப்பட்டு வருமானால் நம்நாட்டில் மாத்திரம் வாரம் லக்ஷக்கணக்கான மக்களை நாட்டை விட்டு அந்நிய நாட்டிற்கு கூலிகளாக ஏற்றுமதி செய்ய முடியுமா? அன்றியும் தொழிலாளர்கள் கஷ்டங்கள் என்பது ஏற்படுமா? தீண்டக்கூடாத—தெருவுக்கூடாத—பார்க்கக்கூடாத— மக்கள் என்போர்கள் கோடிக் கணக்காய் பூச்சி, புழு, மிருகங்களுக்கும் கேவலமாயிருந்து கொண்டிருக்க முடியுமா? 100க்கு மூன்று பேர்களாயிருக்கும் பார்ப்பனர்கள் மற்ற 100க்கு 97 பேர்களை சண்டாளர், மிலேச்சர், சூத்திரர், வேசிமக்கள், தாசிமக்கள், அடிமைப் பிறப்பு என்று சொல்லிக் கொண்டு அட்டை இரத்தத்தை உறிஞ்சுவது போல் உறிஞ்சிக்கொண்டும், நம்மையும் நம் நாட்டையும் அந்நியனுக்குக் காட்டிக் கொடுத்து நிரந்திர அடிமைகளாக இருக்கும்படி செய்துகொண்டும் இருக்க முடியுமா என்று கேட்கின்றோம். நமக்கு கல்வி இல்லாததற்கு சர்க்கார் மீது குற்றம் சொலுத்துவதில் கவலை கொள்ளுகின்றோமேயல்லாமல் நம் சாமியும், பூதமும், சமயமும் நம் செல்வத்தையும் அறிவையும் கொள்ளை கொண்டிருப்பதைப் பற்றி யாராவது கவலை கொள்ளுகின்றோமோ என்று கேட்கின்றோம்.

நிற்க, "அன்பையோ, அருளையோ, ஒழுக்கத்தையோ, உபசாரத்தையோ மாறு பொருள் கடவுள் என்று கூப்பிடுகின்றேன், அதனால் உனக்கு என்னதடை?" என்றுயாராவது சொல்ல வருவார்களானால், அதையும் (அதாவது அக்குணங்கள் என்று சொல்லப்பட்ட கடவுள் என்பதையும்) பின்பற்றும்படியான குணங்களாகவோ "கடவுள்" களாகவோ தான் இருக்கவேண்டும் என்று சொல்லுகின்றோமே ஒழிய வணங்கும்படியான கடவுளாக இருக்க நியாயம் இல்லை என்றே சொல்லுவோம்.

மதம்.

இது போலவேதான் "மதம் என்பதும் சமயம் என்பதும் சமய நெறி என்பதும் மற்ற ஜீவன்களிடத்தில் மனிதன் கடந்து கொள்ள வேண்டிய நடையைப் பற்றிய கொள்கைகளைக் கொண்டது" என்பவர்களிடத்திலும் நமக்கு அவ்வளவாக தகராறு இல்லை. "அன்பேசிவம் சிவமே அன்பு" என்பதான சிவனிடத்தில் நமக்கு சண்டையில்லை "அன்பு என்றும் குணம்தான் சிவம்; அந்த அன்பைக் கைக்கொண்டு

ஜீவன்களிடத்தில் அன்பு செலுத்துவது தான் சைவம்" என்பதானால் நாமும் ஒரு சைவனாகவும் அதன் மூலம் நாமும் ஒரு சைவன் என்று சொல்லிக்கொள்ளவும் ஆசைப் படுகின்றோம். அது போலவே "ஜீவன்களிடத்தில் இரக்கம் காட்டுவது, ஜீவன்களுக்கு உதவி செய்வது ஆகிய குணங்கள் தான் விஷ்ணு; அக்குணங்களைக் கைக்கொண்டு ஒழுகுவது தான் வைணவம்" என்பதான விஷ்ணுவிடத்திலும் வைணவனிடத்திலும் நமக்கு அவ்வளவாக தகாராறில்லை என்று சொல்லுவதோடு நாமும் நம்மை ஒரு வைணவன் என்று சொல்லிக்கொள்ளும் நிலைமை ஏற்படவேண்டும் என்றே ஆசைப் படுகின்றோம். நமக்கும் மற்றும் உள்ள மக்களுக்கும் அச் "சைவத் தன்மை"யும் "வைணவத்தன்மை"யும் ஏற்பட வேண்டும் என்றும் தவங் கிடக்கின்றோம்.

அப்படிக் கில்லாமல், இன்னமாதிரி உருவம் கொண்ட அல்லது குணம் கொண்டது தான் கடவுள் என்றும், அதை வணங்குகிறவன் தான் சைவனென்றும் அப்படி வணங்குகிறவன் இன்ன மாதிரியான உடை பாவனை கொண்டவனாகவும் இன்னமாதிரி குறி இடுகிறவனாகவும் இருப்பது தான் சைவம் என்றும், இன்ன பேருள்ள கடவுள்களைப் பற்றிப் பாடின, எழுதின ஆசாமிகளையும் புஸ்தகத்தையும் வணங்குவதும் மரியாதை செய்வதும்தான் சைவம் என்றும், மற்றபடி வேறு இன்ன உருவமோ, பேரோ உள்ள "கடவுள்" என்பதை வணங்குகிறவர்களையும் வேறு குறி இடுகின்றவர்களையும் யாதொரு குறியும் இடாதவர்களையும் சைவரல்லாதவர் என்று சொல்வதுமான கொள்கைக் காரரிடமே நமக்குப் பெரிதும் தகராறு இருக்கின்றது என்று சொல்வதுடன் அக் கொள்கைகளையும் அச் சமயங்களையும் அக் கடவுள்களையும் சுட்டுப் பொசுக்கவேண்டும் என்றும் சொல்லுகின்றோம்.

அன்றியும் பல சமயப் புரட்டர்கள் இம்மாதிரி விவகாரம் வரும்போது "நான் கடவுள் என்பதாக ஒரு தனி வஸ்துவோ ஒருகுணமோ இருப்பதாகச்சொல்லவில்லை" என்றும், "மலை தான் கடவுள், ஆறுதான் கடவுள், சமுத்திரம் தான்கடவுள், மரம்செடிதான் கடவுள், புஷ்பம் தான் கடவுள், அதன்மணம் தான் கடவுள், அழகு தான் கடவுள், பெண்தான் கடவுள், அதன் இன்பம் தான் கடவுள், இயற்கை தான் கடவுள், அத்தோற்றம்தான் கடவுள்" என்பதாக தமக்கேபுரியாமல் உளறு

வதும், மறுபடியும் "சிவன் தான் முழு முதற் கடவுள், மற்றபடி விஷ்ணுவும் பிரம்மாவும் அவரது பரிவார தேவதைகள், சைவசமயம் தான் உண்மைச் சமயம் அது தான் முக்தி அளிக்க வல்லது" என்பதும், அல்லது "விஷ்ணுதான் முழு முதற் கடவுள், அதுதான் பரத்துவம் கொண்டது, மற்றவைகள் விஷ்ணுவின் பரிவார தேவதைகள்" என்பதும், "வைஷ்ணவ சமயம் தான் உண்மைச் சமயம், அதில்தான் பரத்திற்கு மார்க்கம் உண்டு" என்பதும், "அச்சிவனையோ விஷ்ணுவையோ முழுமுதற் கடவுளாகக் கொண்டு அக்கடவுள்களையும் அச்சமயங்களையும் பாடினவர்கள் தான் கடவுள் நெறியையும் நிலைமையையும் உணர்த்திய பெரியார்கள்—சமயாச்சாரியார்கள்" என்பதுமாக மக்கள் முன் உளறிக்கொட்டி அவர்களது மனதை குழப்பச் சேற்றில் அழுத்துகின்றவர்கள் பலர் இருக்கின்றார்கள். அவர்களது புரட்டையும் பித்தலாட்டங்களையும் வெளியாக்கி மக்களை குழப்பச் சேற்றிலிருந்து விடுவிக்க வேண்டுமென்று தான் சொல்லுகின்றோம்.

உலகத்தில் கடவுள் என்பது இன்னது என்பதாக மனதில் விவரப்படுத்திக் கொள்ளாமலே கடவுளைப்பற்றிய தர்க்கங்களும் தகராறுகளும் தினமும் நடைபெற்று வருகின்றன. இது இன்று நேற்று ஏற்பட்ட விவகாரம் அல்ல என்றுங்கூட சொல்லுவோம்.

எனவே, மக்களின் பாரம்பரியமானதும் எங்கும் பரவியிருக்கும்படியானதுமான மடமைக்கு இதை விட வேறு உதாரணம் கிடையாது என்பது நமது அபிப்பிராயம். எனெனில் இந்த விவகாரம் பாமர மக்களிடையில் மாத்திரம் நடைபெற்று வருகின்றது என்று சொல்லுவதற்கில்லை. இது பெரும்பாலும் படித்தவன், ஆராய்ச்சிக்காரன், பண்டிதன், பக்திமான் என்கின்ற கூட்டத்தாரிடையே தான் பெரிதும் (இவ்வறியாமை) இடம்பெற்று உரம் பெற்றிருக்கின்றது.

கடவுள் அவசியமா?

நிற்க, சர்வவல்லமையுள்ளது என்று சொல்லப்படுவதான ஒரு "கடவுள்" இருக்கின்றார் என்பதை (அது இன்னது என்று புரியாவிட்டாலும்) விவகாரமில்லாமல் ஒப்புக்கொள்ளுவதாகவே வைத்துக்கொண்டாலும் மனிதனின் வாழ்க்

கைக்கு அக்கடவுளின் சம்மந்தமோ, வழிபாடோ அவசியமா? அல்லது மனிதனுக்கு சில குணங்களைக் கைக்கொண்டு அதன்படி ஒழுகும் தன்மை அவசியமா என்பதே நமது கேள்வி. அன்றியும் அப்படிப்பட்ட ஒரு "கடவுள்" தன்னை மக்கள் வழிபட வேண்டும் என்றாவது, தனக்கு கோவில்கட்ட வேண்டுமென்றாவது, பூசை, அபிஷேகம், தேர், திருவிழா, உற்சவம் முதலியவைகள் செய்யவேண்டும் என்றாவது ஆசைப் படுமா? அல்லது மக்கள் சில குணங்களைக் கைக்கொண்டு மற்றஜீவன்களிடத்தில் இன்ன இன்னவிதமாய் நடந்து கொள்ளவேண்டும் என்பதை விரும்புமா? என்பதை போசித்துப் பார்த்தால் "கடவுள்" என்பது வாழ்க்கைக்கு வேண்டுமா வேண்டாமா என்பது விளங்காமல் போகாது. அன்றியும் அச்சர்வ வல்லமையுள்ள சாமிகளை மக்களுக்கு அறிமுகப்படுத்த இவ்வளவு ஆசாமிகளும் சமயங்களும் வேண்டுமா என்றும் அந்தச் சாமிகளை இல்லை என்பவர்களுக்கு ருஜுபடுத்த இவ்வளவு வக்கீல்கள் வேண்டுமா என்றும் கேட்கின்றோம்.

இதுபோலவே ஒவ்வொரு மதத்திலும் ஒவ்வொரு விதமாக உலகத்திற்கும் மக்களுக்கும் கடவுளுக்கும் சம்பந்தம் கற்பிக்கப்பட்டிருந்தாலும் புத்த மதம் என்பதில் மனிதன் நடந்துகொள்ளவேண்டிய ஒழுக்கங்களைத் தவிர வணக்கம் என்பதை அம்மதத் தலைவர் ஒரு சிறிதும் வலியுறுத்தியிருப்பதாகக் காணப்படவில்லை.

அன்றியும் அவர் கடவுளைப்பற்றியோ, கடவுளை வணங்குவதைப்பற்றியோ, கடவுள் நெறி உணர்த்திய பெரியார்களை மரியாதை செய்வதைப் பற்றியோ கவலைகொண்டு ஒரு கடுகளவு நேரமாவது செலவழித்திருப்பதாகவும் காணக் கிடைக்கவில்லை. அன்றியும் அதைப்பற்றிய வார்த்தைகளையாவது அவர் எங்காவது உபயோகித்திருப்பதாகச் சொல்லுபவர்களும் காணக் கிடைக்கவில்லை. அப்படிப்பட்ட ஒருவரை மதத் தலைவராகவும், அக்கொள்கையை அம்மதத்தை, அச்சமயத்தை இன்றைய தினம் உலகத்திலுள்ள மொத்த ஜனத்தொகையில் மூன்றில் ஒரு பங்குக்குமேல் அதாவது 50 கோடி மக்களுக்குமேல் தம் மதமாகவும் ஏற்றுக் கொண்டிருப்பதாகச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

அன்றியும் அப்படிப்பட்ட புத்தரை தங்கள் கடவுள் அவதாரமென்றும், தீர்க்க தரிசியென்றும், பகவான் என்றும்

சொல்லிக்கொண்டிருக்கின்ற ஜனங்கள் இந்துமதம் என்பதிலே, சைவமதம் என்பதிலே, வைணவமதம் என்பதிலே பல கோடிக்கணக்கானவர்கள் இருப்பதோடு அதற்கு பல ஆதாரங்களும் வைத்துக் கொண்டிருக்கின்றார்கள். இதை யாராவது மறுக்க முன் வருகின்றார்களா?

"மனிதனுக்கு எதாவது ஒரு மதமோ சமயமோ வேண்டியது அவசியம்" என்று யாராவது சொல்ல வருவார்களானால் புத்தமதம் என்பதும் உலகாயுத மதம் என்பதும் சூன்ய மதம் என்பதும் இயற்கை மதம் என்பதும் மதங்கள் என்றுதானே சொல்லப்படுகின்றன? அப்படி இருக்கையில் அம்மதங்களில் எதாவது ஒன்றைக் கொண்டவர்கள் பலர் இருக்கலாம். எனவே அது எப்படி குற்றமுடையதாகும்? எப்படி பல மதங்களுக்கும் சமயங்களுக்கும் தலைவரும் காலமும் இல்லாமல் இருக்கின்றதோ, அதுபோலவே இம் மதங்களில் சிலவற்றிற்கும் காலமோ தலைவரோ இல்லாமலிருக்கலாம்.

ஆகவே, ஒரு மனிதன் இன்ன மதக்காரனாகவோ இன்ன சமயக்காரனாகவோ, இன்ன கடவுளை வணங்குகிறவனாகவோ இருக்கவேண்டும் என்பதாகக் கட்டளையிடவும் இன்ன மதக்காரனாக இருக்கக்கூடாது என்று நிர்ப்பந்திக்கவும் யாருக்கு உரிமை உண்டு என்று கேட்கின்றோம்.

மனிதனுக்கு மதம் வேண்டும் என்பது அந்தந்த மனிதனின் தனி இஷ்டத்தைப் பொறுத்ததா அல்லது மற்றொருவனுடைய நிர்ப்பந்தமா என்று கேட்கின்றோம்.

"துறவி"க்கு மதம் எது? "ஞானி"க்கு சமயம் எது? கடவுள் எது? "வேதாந்"திக்கு மதம் எது? கடவுள் எது? சகலத்தையும் துறந்தவர் தானே "துறவி"? சகலத்தையும் சரி என்று எண்ணுகின்றவர்கள் தானே "ஞானி"?

"சகலமும் மித்தை, பொய், மாய்கை" என்று எண்ணுகின்றவன் தானே "வேதாந்தி" என்பவன்? இவைகளை உலகம் ஒப்புக்கொள்ளுகின்றதா இல்லையா? அங்ஙனமாயின் இம்மூவர்களும் "நாஸ்திகர்"களா என்று கேட்கின்றோம்.

உலகத்தில் 'துறவி' ஆவதற்கோ 'ஞானி' ஆவதற்கோ 'வேதாந்தி' ஆவதற்கோ எவனுக்கு உரிமை இல்லை என்று

கேட்பதோடு எந்தப் புஸ்தகத்தை படித்து விட்டு யாரிடம் உபதேசம் பெற்று அல்லது எந்த சமயத்தை ஏற்று எந்தக் கடவுளைத் தொழுது 'துறவி'யாகவோ 'வேதாந்தி'யாக வோ ஆகவேண்டும் என்கின்ற நிர்ப்பந்தமுண்டா என்று கேட்கின்றோம்.

இவ்விஷயங்களை நாம் வலியுறுத்துவதால் பல நண்பர் களுக்கு சற்று மனக்கசப்பு ஏற்படலாம் என்பது நமக்குத் தெரியும். ஆனாலும் நம் நாட்டின் விடுதலை கண்டிப்பாய் இந்த விஷயங்கள் விளக்கமாவதில் தான் இருக்கின்றதே யொழிய வெள்ளைக்காரரிடமும் பார்ப்பனர்களிடமும் சேரில் முட்டிக்கொள்வதால் ஒரு பயனும் இல்லை என்றே சொல்லு வோம்.

வெள்ளைக்கார அரசாங்க முறையும் பார்ப்பனர்களின் ஆதிக்கமும் நமது மானத்திற்கும் அடிமைத்தனத்திற்கும் தரித்திரத்திற்கும் ஆதாரமாயிருக்கின்றது என்பது சத்திய மானாலும் அவ்வக்கிரமமும் ஆட்சியும் ஆதிக்கமும் இந்து மதம், கடவுள், சமயம் என்பவைகளான மூடக்கொள்கை களின் பேரில் தான் கட்டப்பட்டிருக்கின்றது என்பது நமது முடிவு. இம்மூடக்கொள்கைகளை வைத்துக்கொண்டு வெள் ளைக்காரர்களையும் பார்ப்பனர்களையும் பூண்டோடு அழி க்க நம்மால் முடிந்து விட்டாலும் மறுபடியும் வெள் ளைக்காரர்களும், பார்ப்பனர்களும், வேறு எங்காவதிருந் தோ அல்லது நமக்காகவே உற்பத்தியாகியோ நம்மை அடி மைகளாக்கி ஆதிக்கம் செலுத்திக்கொண்டு தான் வருவார் கள் என்பதை ஒவ்வொருவரும் கண்டிப்பாய் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும் என்பதாகத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

வெள்ளைக்கார அரசாங்கமோ அல்லது வேறு அந்நிய அரசாங்கமோ இல்லாமல் நம் நாட்டார்கள் என்போர்கள் அரசாண்டு வந்த காலத்திலேயே நாம் அடிமைகளாக, தற் குறிகளாக, தாசி மக்களாக, தீண்டாதார்களாக இருந்து வந் திருக்கின்றோம் என்பதை தயவு செய்து நம்புங்கள் என்று வேண்டிக்கொள்ளுகின்றோம்.

நம்புவதற்கு ஏதாவது கஷ்டமாயிருந்தால் நம் நாட்டு நம் மக்களால் 'சாமுண்டீஸ் வரி' போராலும் 'பத்மநாபசாமி' போராலும் 'கிருஷ்ணசாமி' போராலும் ஆளப்படும் மைசூரையும்

பேய், பிசாசு என்பதுண்டா?

ஓர் ஆராய்ச்சி

பம்பாய் அறிவு விளக்கச் சங்கத்தாரின் வேண்டுகோளின் மீது அதன் தலைவர் தோழர் எ. எம். சுந்தரதாஸ் பேய், பிசாசுகளைப் பற்றிப்பின் வருமாறு எழுதுகிறார்:—

பேய், பிசாசு என்பது உண்மை ஒன்றுமில்லை. இல்லாததை உண்டு என்று பிதியால் நம்புவதே பேய் எனக் கொள்ளப்படுகிறது. பிரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்று சொல்லப்படுவதிலிருந்தே பிரண்டவர்களுக்குத் தான் பேய் என்பது தோன்றுகிறதென்றும், கல்ல அறிவுடனும் புத்தி சுவாதீனத்துடனும் இருப்பவர்களுக்கு அத்தகைய உணர்ச்சியே ஏற்படுகிறதில்லை என்றும் தெரிகிறதல்லவா? சில அறியாமை நிரம்பிய ஜனங்கள் பேய், பிசாசு பயங்கரமாக இருக்கும் என்று யாரோ சொல்லி விடுவதைக் கேட்டுப் பிதியடைந்து அந்தப் பிதியால் சதா அதையே

திருவாங்கூரையும் கொச்சியையும் தயவு செய்து சற்று திரும்பிப்பாருங்கள் என்று வேண்டிக் கொள்ளுகிறோம்.

ஆட்சி முறைக் கொடுமையும், பார்ப்பன ஆதிக்கமும், வெள்ளைக்கார அந்திய அரசாங்கத்தை விட உள்நாட்டு மக்களால் ஆளப்படும் சுயராஜ்ய அரசாங்கத்தில் அதிகமா? கொஞ்சமா? என்பதைக் கவனித்தால் வெள்ளைக்காரரும் பார்ப்பனர்களும் தாங்களாகவே தங்கள் பலத்தால் அக்கிரமங்களை செய்கின்றார்களா? அல்லது இந்து மதமும் கடவுளும் மதநெறியும் இவ்வித அக்கிரமங்கள் செய்ய இடங் கொடுக்கின்றனவானன்பது சுலபத்தில் விளங்காமல் போகாது என்றே எண்ணுகின்றோம்.

எனவே நம் நாட்டிற்கு இப்போது அவசியமாக வேண்டியது என்னவென்றால், மூட நம்பிக்கை ஒழிய வேண்டும்; அறிவுக்கு சுதந்திரமும் விடுதலையும் ஏற்பட்டு அது வளர்ச்சி பெற வேண்டும்; சுயமரியாதை உணர்ச்சி ஏற்படவேண்டும். இம்மூன்றும் ஏற்பட வேண்டுமானால் மதமும், சாமியும், சமபாச்சாரியார்களும் சந்திக்கு வந்தே தீரவேண்டுமே யல்லாமல் இதற்கு வேறு பர்த்தியோ ராஜியோ இல்லையென்றே சொல்லி இதை முடிக்கின்றோம்.

மனதில் நினைத்துக்கொண்டு அதற்கு ஒரு உருவையும் தங்கள் மனக்கண்ணில் ஏற்படுத்தி விடுவதால் அவர்கள் பேயைப் பற்றி நினைக்கும்போது அந்த உருவம் எதிரில் நிற்பதுபோல் நினைத்துப் பயப்படுகின்றனர். சிலர் தற்கொலை செய்து கொண்டவர்களும், வேறு துர் மரணங்களை அடைந்தவர்களும் பேய், பிசாசுகளாக மாறி ஜனங்களைத் துன்புறுத்துவதாகக் கூறினர். அதுவும் தக்கபடி ஆராய்ச்சி செய்து பார்த்தால் பொய்யாகும். பஞ்ச பூதங்களாகிய இவ்வுடல் எரிக்கப்பட்டு அழிந்ததும் பஞ்ச பூதங்களும் அதனுடன் கலந்து விடுகின்றன. ஆன்மா உடனே பிறக்க வேண்டும் அல்லது சூக்ஷும உலகில் இருக்க வேண்டும். உண்மை இவ்வாறிருக்க, எப்படி இறந்தவர்களின் ஆன்மா இதரர்களைத் தொந்தரை செய்ய முடியும்? உருவமில்லா பேய் பிசாசுகள் எப்படி அடிக்கவும் கடக்கவும் முடியும்? ஆகவே பேய் பிசாசென்பதெல்லாம் அறியாமையாலும், மூடத்தனத்தாலும், அச்சத்தாலும் கினைக்கப்படும் பொய் வஸ்துவே யன்றி வேறொன்றுமில்லை.

ஆண்களையும் பெண்களையும் பேய் பிடித்திருக்கிறதென்று சொல்லி மந்திரவாதி பூசாரி முதலியவர்களிடம் ஒப்புவித்துப் பணம் செலவிடுவதும், அதை இன்னும் ஆட்ட பாட்டங்களால் அதிகப்படுத்தி விடுவதும், இதனால் எவ்வளவோ துன்மார்க்கங்களும் மோசடிகளும் கடப்பதும் நமது அறியாமையையே காண்பிக்கிறது. நானும் சுமார் 24-வருடங்களாக வைத்தியனாயும், மந்திரவாதியாகவும், மெஸ்மெரிசம் முதலிய மனோவசிய சக்தியுடையவனாயும் இருந்து பல சந்தர்ப்பங்களில் பல விஷயங்களை ஆராய்ந்திருக்கிறேன். இவ்வனுபவத்தின் பயனாக பேயோ பிசாசோ நிச்சயமாக இல்லையென்று தெரிகிறது. வியாதி காரணமாகச் சிற்சிலருக்குச் சிற்சில சமயங்களில் மூளைக்கொதிப்பேறி விடுவதால் அப்படிப்பட்டவர்கள் சித்த ஸ்வாதீனமின்றிப் பைத்தியம் பிடித்தவர்கள்போல் ஆடவும் பாடவும், பிறரை அடிக்கடினதோ தோ உளறவும் செய்வர். அப்படிப்பட்டவர்களுக்குப் பிசாசு பிடித்திருக்கிறதென்று மந்திரவாதிகளிடம் அழைத்துச் செல்வதால் அது அதிகப்படுகிறதே யொழிய குறைவதில்லை. எப்போதோ மூளை சாந்தமடையும்போது குறைந்தது போல் காணப்படும். அது கண்டு பிசாசு சிறிது குறைந்ததென்று நினைப்பர். ஆகவே கல்ல வைத்தியத்தால் அவ்வியாதியைத் தீர்த்து விடலாம். பேய் பிசாசுகள் கிடையாது.

பார்ப்பனரல்லாதவர்களுக்கு சடங்குகளுண்டா?

(எ. மாணிக்கம்)

வருணாச்சிரம தருமங்களைப்பற்றி பார்ப்பனர்கள் எழுதி வைத்திருக்கும் நூல்களில் முதன்மையாயுள்ளது மனுதர்ம சாஸ்திரம். இப்போதுள்ள பார்ப்பனரல்லாதாரையும் நான்காம் வருணத்தார்களாகிய சூத்திரர்களென்று பார்ப்பனர்கள் சொல்லுகிறார்கள். மேற்கண்ட மனுதர்ம சாஸ்திரத்தில் சூத்திரர்களென்ற சாதியாருக்கு எவ்வித சுப சடங்குகளும் பிதுர் சடங்குகளும் கிடையாதென்று எழுதப்பட்டிருக்கிறதே தவிர சடங்குகள் செய்யவேண்டுமென்று ஒரு வரிகூட எழுதப்படவில்லை. அவ்விதமிருக்க அயோக்கியர்களாகிய புரோகிதப் பார்ப்பனர்களும் அவர்களோடு கூடி வந்து கொள்ளை யடிக்கும் பிச்சை வாங்கும் பார்ப்பனர்களும், கர்ப்பவர்களுக்கு விவாகம், கர்ப்பதானம், சீமந்தம், விதை தானம், புண்ணியாவசனம், அன்னப்பிராசனம், கர்ணபூஷணம், வித்தியாப்பியாசம் முதலான சுப சடங்குகளும், இறக்கும் தருவாயில் செய்த பாவங்களையெல்லாம் போக்க சர்வப்பிராயச் சித்தம், இறந்த பின் அந்தியேஷ்டி கிரியை, தகனக்கிரியை, கருமாதி, மாத மாசியம், வருஷாப்தீகம், அமாவாசை தர்ப்பணம், மாதப்பிறப்பு தர்ப்பணம், உத்திராயண தட்சணாயன புண்ணியகால தர்ப்பணம், கிரஹண தர்ப்பணம், வருஷ சிரார்த்தம், மாளய பட்ட சிரார்த்தம் முதலான பல பிதுர்ச்சடங்குகளும் உண்டென்று அவர்கள் சாஸ்திரத்துக்கு விரோதமாய் பொய் சொல்லி நம்மவர்களை ஏமாற்றி ஒரு குடும்பத்துக்கு வேண்டிய அரிசி, பருப்பு, உளுந்து முதலான சகல தான்யங்களும், உப்பு, புளி, மிளகு, சீரகம் முதலான சகல சாமான்களும், எண்ணெய், நெய், பால், தயிர் முதலானவைகளும் எண்ணிறந்த காய்கறி வகைகளும், பழவர்க்கங்களும் கொள்ளை கொண்டு போவதோடு திரவியம், வஸ்திரம், குடை, பாதரட்சை, பாத்திரம் முதலானவைகளையும் தானம் வாங்கிப் போகிறார்கள். இன்னும் செல்வவந்தர்களிடம்

நிலையான ஜீவனத்துக்கு உபயோகமான பூமி, வீடு, பசு, ரிஷபம் முதலானவைகளையும் தானம் வாங்கிப் போகின்றார்கள்.

இம்மட்டோ? விரதங்களினால் மோட்சம், சுவர்க்கம், புத்திரோற்பத்தி, ஆயுள் விர்த்தி, தனதான்ய விர்த்தி முதலானவைகளும், மறு ஜன்மத்தில் அளவில்லாத ஐஸ்வர்யமும் உண்டாகுமென்று கற்பித்து பலவகை தானங்களும் திரவியங்களும் கொள்ளை கொண்டு போகிறார்கள். இவ்வபோக்கியப் பார்ப்பனர்களால் அவர்களின் வயிற்றுப்பிழைப்புக்காக எழுதி வைக்கப்பட்டிருக்கும் பொய்யும் புரட்டும் நிறைந்துள்ள மனுதர்ம சாஸ்திரத்தில் துவிஜ ஜாதி அல்லாதவர்களுக்கு சடங்குகளுண்டென்று ஒரு இடத்திலாவது ஒரு வரியாவது எழுதி வைக்கப்பட்டிருக்கிறதா வென்பதை நாம் பார்க்காமல் ஏமாந்து மோசம் போய் சோம்பேறிப் பார்ப்பனர்களுக்கு நாம் கஷ்டப்பட்டு சம்பாதிக்கும் பொருள்களை வருஷத்துக்குப் பலமுறை அள்ளிக் கொடுத்து விட்டு நாம் தரித்திரர்களாகி வருகிறோம். பிச்சைக்காரப் பார்ப்பனர்கள் மேற்கண்ட பலவித தானங்களைக் கொள்ளை கொண்டு பணக்காரர்களாகி சகல போகங்களையும் அனுபவித்து வருகிறார்கள்.

மனு நூலில் "சூத்திரர்"களுக்கு முப்பது நாள் தீட்டு உண்டென்றும், அந்தத்தீட்டு மூங்கில் தடியைத் தொடுவதினால் போய் விடுமென்றும் எழுதி வைத்திருக்க, பதினாறு நாள் தீட்டு என்று தீட்டுப்போக புண்ணியாவசனம், கரகஸ்நானம் முதலான வைகள் செய்யச் சொல்லிப் பணம் பறிக்கிறார்கள். இவர்கள் இப்படிச் செய்வதற்குக் காரணம் நம்மவர்களெல்லோரையும் துவிஜ ஜாதியில் சேர்ந்த க்ஷத்திரியர், வைசியர்களென்று சொல்லுகிறார்களா வென்று கேட்கிறேன். அல்லது நம்மவர்களை சூத்திரர்களென்று சொன்னால் "சூத்திரர்"களுக்குச் சாஸ்திரத்தில் யாதொரு சடங்குகளும் விதிக்கப்படாமலிருக்க சடங்குகளுண்டென்று பொய் சொல்லி நம்மை ஏமாற்றிப் பணம் பறித்துப் போகவில்லையா வென்று கேட்கிறேன். ஆகையால் பார்ப்பனர்கள் தங்கள் வயிற்றுப் பிழைப்புக்காகப் பொய் சொல்லி நம்மை ஏமாற்றி பல வகை சடங்குகள் செய்யச் சொல்லி பணம் பறித்துப் போகிறார்களென்பதை யுணர்ந்து அனாவசியமான சகல சடங்குகளையும் நிறுத்திவிட வேண்டியது அவசியம். "சூத்திர" வகுப்பினர்களுக்கு மனு நூலில் யாதொரு சடங்குகளும் விதிக்கப்படவில்லை யென்பதை எடுத்

துக்காட்ட அம்மனு நூலில் எழுதியுள்ளவற்றில் சிலவற்றை அடியில் குறித்துள்ளேன்.

மனு 2—16, 26, 27வது சுலோகங்களில் கர்ப்பதான முதல் தேக சமஸ்காரம் வரையில் உள்ள சகல கருமங்களும் துவிஜ ஜாதியாரான பிராமணர், சத்திரியர் வைசியர்களுக்கு மாத்திரம் சொல்லப்பட்டிருக்கின்றனவே யன்றி அக்கருமங்கள் சூத்திரர்களுக்குச் சொல்லப்படவில்லை.

மனு—10—126 "சூத்திரனுக்கு உபநயன முதலான சமஸ்காரங்களில்லை."

மனு—10—122. "சூத்திரன் சுவர்க்கத்திற்காவது, ஜீவனத்துக்காவது பிராமணனையே தொழுவேண்டும்."

மனு—10-123. "பிராமணனை உபசரிப்பதே சூத்திரனுக்கு எல்லாத் தொழிலைவிட மேலான கருமமென்று, மற்றவைகளெல்லாம் பயனில்லாதவைகளென்றும் கருமகாண்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது."

மனு—5-81. "சூத்திரர்கள் மூப்பது காள் தீட்டு இருக்க வேண்டியது"

மனு—5-99. "சூத்திரனுக்குத் தீட்டுப் போகும் காளில் மூங்கில் தடியைத் தொட்டால் தீட்டுப் போய்விடும்."

மேற்கண்ட சுலோகங்களினால் பார்ப்பனர்களால் சூத்திரர்களென்று கூறப்பட்டு வரும் வகுப்பினர்களுக்கு மனு நூலில் யாதொரு சடங்குகளும் விதிக்கப்படவில்லை என்பது நன்கு விளங்குகிறது.

நம்மவர்களில் சிலர் அறியாமையினால் மோசக்கார புரோகிதப் பார்ப்பனர்கள் வார்த்தைகளில் நம்பிக்கை கொண்டு சகல சடங்குகளும் செய்து பார்ப்பனக் கூட்டத்தாருக்கே தங்களுடைய பொருளைக் கொட்டிக் கொடுத்து வருவதுந் தவிர உண்மையை எடுத்துரைக்கும் "குடி அரசு" முதலான பத்திரிகைகளை நிந்தித்தும் வருகிறார்கள். இவர்கள் மனுதர்ம சாஸ்திரம் என்னும் நூலை ஒரு தடவை ஆதியோடு அந்தமாக வாசித்துப் பார்த்தால் பார்ப்பனர்கள் வார்த்தையை நம்பி சடங்குகள் செய்து திரவியத்தை வீணாகச்

செலவு செய்யமாட்டார்கள். எனென்றால் சாஸ்திரத்திலே விதித்துள்ளபடி யோக்கியதையுள்ள பிராமணன் இப்பூலோகத்திலேயே கிடைக்கமாட்டான். யோக்கியதையற்ற பிராமணனுக்கு ஒருவன் தானம் கொடுத்தால் அந்தத் தானம் பிரயோஜனமில்லாமல் போவதோடு தானம் கொடுத்தவனுக்குப் பாவமும், எமலோகத்தில் கடூரமான தண்டனையும் விதிக்கப்படுமென்று அநேக நூலில் விஸ்தாரமாய்க் கூறப்பட்டிருக்கின்றன. அவைகளில் சிலவற்றை அடியிற் குறித்துள்ளேன்.

மனு,—3-97. "வேதங்கள் அவைகளின் அர்த்தங்கள் இவைகளை முற்றும் கற்று அறியாத பிராமணனுக்கு தேவர்களையும் பிதுர்க்களையும் குறித்து ஒருவன் தெரியாமல் தானம் கொடுத்தால் அந்தத்தானமானது நெருப்பு அவிந்துபோன சாம்பலில் நெய்யை வார்த்து ஓமம் செய்தால் எப்படிப் பிரயோஜனப்படாதோ அப்படிப் போல் நசித்துப் போகிறது."

மனு—3-132. "ஞானத்தில் உயர்ந்தவனுக்கு தேவகாரியத்திலும் பிதுர்க் காரியத்திலும் தானம் கொடுக்க வேண்டியது. ஒருவன் இரத்தத்தினால் பூசப்பட்ட தனது கையை இரத்தத்தினாலேயே அலம்பினால் எப்படிச் சுத்தமாகமாட்டாதோ, அப்படியே ஞானமில்லாதவனுக்குக் கொடுத்த தானம் பயனில்லாமல் போவது மின்றி தானம் கொடுத்தவனுக்குப் பாவமும் உண்டாகும்."

மனு-3-133. "வேதங்களை ஓதி உணராதவனுக்கு சிராத்தம் கொடுப்பவன் எவ்வளவு கவளம் அன்னத்துக்கு உபயோகமாகும்படி தானங் கொடுக்கிறானோ அவ்வளவு கணக்குள்ளளிந்துகொண்டிருக்கிற சூலர்ஷ்டி என்னும் எரிகு கட்டிகளை, தானம் கொடுத்தவன் வாயில் எமலோகத்தில் எமதூதர்கள் புகுத்துவார்கள்."

மனு-3-135, "பிதுர் சிராத்தத்தைத் தத்துவ ஆராய்ச்சி செய்து ஞானம் அடைந்தவர்களுக்கே கொடுக்கவேண்டியது."

மனு-3-142. "களர் நிலத்தில் விதைத்தவன் எப்படிப்பலனடைய மாட்டானோ அப்படியே ஞானமில்லாதவனுக்குச் சிராத்தம் கொடுத்தவன் பலனடையமாட்டான்."

மனு 3-149. "பிதுர் காரியத்தில் தானம் வாங்கும் பிராமணனுடைய குலம், கோத்திரம், ஞானம் இவைகளை அவசியம் முயற்சியுடன் பரீட்சிக்கவேண்டியது."

மனு 3-151-வது சுலோக முதல் 162 சுலோகங்கள் வரையில் கூறியிருக்கிறபடி "வேதங்களை ஓதி உணராதவன், கிராமப் புரோகிதன், வைத்தியம் செய்யும் பிராமணன், கோவில் குருக்கள், வியாபாரத்தினால் ஜீவிப்பவன், ஜீவனத்துக்காக ஆடுமாடுகளை வைத்துக் காப்பாற்றுகிறவன், ஊராருக்கேனும் அரசருக்கேனும் ஏவற்றொழில் செய்கிறவன், ஔபாசனத்தை விட்டவன், வட்டி வாங்கிப் பிழைப்பவன், கூத்தாடுகிறவன், சம்பளம் வாங்கிக்கொண்டு வேதம் ஓதி வைப்பவன், அவனிடத்தில் வேதம் ஓதினவன், சமுத்திரத்தில் கப்பல் மீது சஞ்சரித்தவன், சோதிட சாஸ்திரத்தால் பிழைப்பவன் முதலான இவ்வித பிராமணர்களையும், க்ஷயரோகி, சொத்தைப்பல்லன், யானைக்கால் முதலான மகாரோகமுள்ள பிராமணர்களையும் பிதுர் காரியங்களில் அவசியம் நீக்க வேண்டியது."

மனு 4--193. "வேதம் ஓதி உணராதவனுக்குத் தானங் கொடுத்தால் கொடுத்தவனுக்கு உடனே தீங்கு உண்டாகும். தானம் வாங்கினவனுக்கு இறந்த பின் தீங்கு உண்டாகும்"

மனு 4-194. "கற்சோறாணியால் ஆற்றைக் கடக்கயத்தனித்தவன் எப்படி அத் தோணியோடு தானும் அழுந்திப் போகிறானோ, அப்படியே மூடனுக்குத் தானம் கொடுத்தவன் அம் மூடனுடன் தானும் அழிந்து போகிறான்".

மேற்கூறிய மனுதர்ம சுலோகங்களினால் தானம் பெற யோக்கியதை இல்லாதவனுக்கு ஒருவன் தானங் கொடுப்பதால் அந்தத் தானம் பிரயோஜனமில்லாமல் போவதோடு தானங் கொடுத்தவன் எமலோகத்தில் எமதண்டனை அடைய வேண்டுமென்றும், எழுதி வைத்திருப்பதையும் புரோகித விசுவாசிகளும் பிதுர் சடங்குகளில் நம்பிக்கை கொண்டு பார்ப்பனக் கூட்டத்தாருக்கு வழங்கி வரும் நம்மவர்களும் உணர்ந்து இச்சடங்குகளெல்லாம் சோம்பேறிப் பார்ப்பனர்கள் தாங்கள் சரீரப் பிரயாசையில்லாமல் ஜீவனம் செய்ய வேண்டியதற்காக ஏற்படுத்திய விஷயங்களென்பதை நன்குணர்ந்து இனியும் ஏமாந்து பார்ப்பனர்களுக்கு தானம் வழங்காமலிருக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். சுயமரியாதையுள்ள நண்பர்கள் சடங்குகளில் நம்பிக்கை கொண்ட தங்கள் உறவினர்களுக்கும், சினேகிதர்களுக்கும் மேற்குறித்துள்ள மனுதர்ம சுலோகங்களையும் அந்நூலில் கூறியிருக்கும் மற்ற விஷயங்களையும் எடுத்துக்கூறி . அவர்கள் உண்மை

சாமி. விவேகாநந்தரும் இரக்கமிலா வைதீகப் பண்டிதர்களும்.

(கைவல்ய சாமியார்)

சுவாமி விவேகானந்தர் சென்னை, கும்பகோணம், ராமேஸ்வரம் முதலிய இடங்களில் செய்த பிரசங்கங்களினின்றும், "கிழக்கும் மேற்கும்" என்ற தலையங்கத்துடன் சுவாமிகளுடைய எழுத்துக்களிலே மிகமிக அருமையானவற்றுள், முதலாவதாகக் கருதப்படவேண்டியவியாசத்தினின்றும் நம் நாட்டின் அஞ்ஞானமும் எழ்மையும் கொடுமையும் நீங்கும் பொருட்டு அவர் மேனாட்டிலிருந்து எழுதின கடிதங்களிலிருந்தும் திரட்டி இது எழுதப்படுகிறது.

அதாவது:—

ஜப்பானியர்களைப்பற்றி என் மனதிலுள்ளவற்றையெல்லாம் ஒரு சிறிது கடிதத்தில் என்னால் வரையமுடியாது. நான் விரும்புவதெல்லாம், நமது வாலிபர்களில் அநேகர் வருஷந்தோறும் ஜப்பானுக்குச் சென்று பார்க்கவேண்டுமென்பதே. ஜப்பானியர்களுக்கு இந்தியா இன்னும் உயர்ந்ததும் நன்மையாயுமுள்ள ஒவ்வொன்றையுமுடைய ஸ்வப்ன பூமியாகவே இருக்கிறது. நீங்களோ! உங்களுடைய

யை உணருர்படி செய்வதுடன் தானம் வாங்க வரும் அயோக்கியப் புரோகிதப் பார்ப்பனர்களையும் அவர்களோடு கூடிகொள்ளையடிக்கும் பிச்சைக்காரப் பார்ப்பனர்களையும் பார்த்து தானம் வாங்க யோக்கியதை உங்களுக்கு இல்லை யென்பதை எடுத்துக்காட்டி அவர்களை விரட்ட வேண்டியது. அனேகமாய்ப் புரோகிதன், குருக்கள், ஜோதிடம் சொல்லும் பார்ப்பான் இவர்கள் தான் சுபா சுபகாரியங்களில் வந்து கூடுகிறார்கள். இவர்களுக்குத் தானம் கொடுக்கக்கூடாதென்று மநுநூலில் கூறியிருப்பதை நண்பர்கள் கவனிக்கவும்.

ஸ்திதியென்ன? ஜீவிதகால மெல்லாம் அற்ப விஷயங்களைப் பேசிக்கொண்டிருக்கிற வீண் பேச்சு மாத்திரமாயுள்ளவர்களே! நீங்கள் எப்படியிருக்கிறீர்கள்? வாருங்கள்! வந்து இந்த ஜனங்களைப் பாருங்கள்! பார்த்து விட்டுப் போய், அவமானத்திற்குப் பயந்து உங்கள் முகங்களை ஒளித்துக்கொள்ளுங்கள்! முழுமூட ஜாதியார்! நீங்கள் வெளியில் வந்தால் ஜாதியை இழந்துவிடுவீர்கள்! இந்த நூற்றுக்கணக்கான வருடங்களாகத்தடிப்பேறிய மூடக்கொள்கையினால் மேன் மேலும் அதிகரித்து வருகிற சுமையைத் தலையில் தாங்கி உட்கார்ந்து கொண்டிருக்கிற நீங்கள், நூற்றுக்கணக்கான வருஷங்களாக இந்த ஆகாரத்தை அல்லது அந்த ஆகாரத்தைத் தொடலாம் அல்லது தொடக்கூடாது என்று வாதம் செய்து சக்தியெல்லாம் செலவழிக்கின்ற நீங்கள், எவ்வளவோ வருஷங்களாக ஜன சமூகத்தின் இடைவிடாத கொடூரத்தினால் ஜீவகாருண்யம் சிறிதுமில்லாத நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்! ஐரோப்பியர்களுடைய யுத்தி சக்தியினின்றும் சிதறிக்கிடக்கிற சிற்றறிவைத் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டும், ஜீவிதம் முழுதும் ஒரு முப்பது ரூபாய் குமஸ்தா வேலையடையவோ அல்லது ஒரு வக்கீலாகவோ நிச்சயம் பண்ணிக்கொண்டும் இருக்கின்ற உங்களையும் (இதுவே பால்ய இந்தியாவின் உத்தம ஆசை) ஒவ்வொரு மாணவனுடைய காலடியிலும் பசிநோயினால் பீடிக்கப்பட்டு ஆகாரத்திற்கு அலறுகின்ற ஒரு கூட்டம் குழந்தைகளையுடைய உங்களையும் (இதுவே இந்தியர்களுடைய தற்கால நிலைமை) உங்களுடைய புஸ்தகங்களையும், அங்கிகளையும், சர்வகலாசாலை சாட்சிப் பத்திரங்களையும், எல்லாக் கொடுமைகளுக்கும் ஏதுவாகவிருந்த மூடங்களையும், எல்லாவற்றையும் விழுங்கி விடுவதற்குக் கடலில் போதுமான ஜலம் இல்லையா?

வாருங்கள் மனிதர்களாயிருங்கள்! அபிவிருத்திக்கு எப்போதும் எதிரிடையாயிருக்கின்ற புரோகிதர்களையும், மூடப் பண்டிதர்களையும், வெறுத்துத்தள்ளுங்கள். ஏனென்றால் அவர்களுடைய இருதயங்கள் ஒரு பொழுதும் விசாலமாகா. அவர்கள், நூறாறுகணக்கான வருஷங்களாயுள்ள மூடக் கொள்கை, கொடுமை, இவற்றினின்றும் முளைத்தெழுந்தவர்கள். வைதீகக் கொடுங்கோன்மையைக் களைந்தெறியுங்கள். வாருங்கள்! மனிதனாயிருங்கள், உங்களுடைய நெருங்கிய பொந்துகளினின்றும் வெளியில் வாருங்கள்! ஜன சமூகங்கள் எங்ஙனம் முன்னோக்கிச் சென்று கொண்டிருக்

கின்றன என்பதைப்பாருங்கள். மனிதனை நீங்கள் நேசிக்கிறீர்களா? உங்களுடைய தேசத்தை நீங்கள் நேசிக்கிறீர்களா? அப்படியானால் வாருங்கள் நாம் இன்னும் கலந்தாலோசித்தக்கதான விஷயங்களில் முயற்சி செய்வோம்.

ஆங்கில துரைத்தனத்தார் உங்களுடைய தடித்துப் போன நாகரீகங்களை உடைப்பதற்கு சம்மட்டியால் கொண்டு வரப்பட்ட ஆயுதமாயிருக்கிறார்கள். சென்னை தான் ஆங்கிலேயர் இங்கு ஸ்திரப்படும்படி உதவி செய்ய முதல் மனிதர்களைக் கொடுத்தது. இப்பொழுது யாதுவரினும் பின் வாங்காமல் ஒரு புதிய ஸ்திதியை உண்டுபண்ண, எளியவர்களிடத்தில் இரக்கம் காட்ட, அவர்களது பசித்த வயிற்றுக்கு ஆகாரம் அளிக்க, பொது ஜனங்களின் அறிவை வளர்க்க, அவர்களை முன்னுக்குக் கொண்டு வர, உங்களுடைய முன்னோர்களது கொடுமையினால் மிருகப்பிராயத்திற்கு வந்திருக்கப்பட்டவர்களை மனிதர்களாக்க, தைரியமாய் முயற்சி செய்ய சுயநன்மையற்று யோக்கியர்களாயுள்ள எத்தனை மனிதர்களைக் கொடுப்பதற்கு சென்னை தயாராக விருக்கிறது?

எனது தைரியமுள்ள வாலிபர்கள்! அன்பு, உண்மை, பொறுமை, இவற்றைத் தவிர வேறொன்றும் அவசியமில்லை. வளர்ச்சியைத் தவிர, அதாவது அன்பைத் தவிர ஜீவிதம் என்றால் வேறு என்ன? ஆதலால் அன்பே ஜீவன்; அதுவே ஜீவியகாலநிதி. ஸ்வய நன்மை யெல்லாம் மரணமே; இது எங்கும் எப்பொழுதும் உண்மை. நன்மை செய்தலே ஜீவிதம். பிறர்க்கு நன்மை செய்யாமல் இருப்பதே மரணமெனப்படும். நீங்கள் பார்க்கின்ற மானிட மிருகங்களில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் மரித்தவர்களே, பிரேதங்களே. ஏனென்றால் எனது புத்திரர்களே; அன்பு செலுத்துகிறவனைத் தவிர வேறு எவனும் ஜீவிக்கிறதில்லை. உணருங்கள். எளியவர்கள், அறிவீனர்கள், தாழ்த்தப்பட்டிருப்போர்கள் இவர்களுக்காக இரங்குங்கள்.

ஸ்வதந்திரமின்றி வளர்ச்சியே யில்லை. நமது முன்னோர்கள் மதக் கொள்கைகளை ஸ்வதந்திரப் படுத்தினார்கள். (நாம் ஒரு அற்புதமான மதத்தையுடையவர்களாக இருக்கிறோம்) ஆனால் அவர்கள் ஜன சமூகத்தின் கால்களில் பெரிய விலங்கையிட்டார்கள். நமது ஜன சமூகம்,

சுருக்கத்தில், பயங்கரமாகவும் ஆபாசமாயும் இருக்கின்றது. மேல் நாடுகளில் எப்பொழுதும் ஜன சமூகத்திற்கு ஸ்வதந்திரம் உண்டு. அவர்களைப் பாருங்கள்; அவர்களுடைய மதத்தையும் பாருங்கள். வளர்ச்சிக்கு முதலாவதாக வேண்டியது ஸ்வதந்திரம். மனிதனுக்கு, நினைப்பதற்கும் பேசுவதற்கும் ஸ்வதந்திரம் வேண்டியது போலவே அவனுக்கு ஆகாரம், உடை, விவாகம் முதலிய எல்லா விஷயங்களிலும் ஸ்வதந்திரம் வேண்டும்.

ஜட சம்பந்தமான நாகரீகம் கூடாது என்று நாம் மூடத்தனமாகப் பேசுகின்றோம். "இந்த நாட்டைப் பழுங்கள் புளிக்கும்" என்கிற அந்த மூடத்தனத்தை யெல்லாம் நாம்ஓப்புக்கொண்டாலும்-இந்தியா முழுவதிலும் ஒரு லட்சம் போர் உண்மையான ஆத்ம ஞானிகள் இருப்பதாக வைத்துக் கொண்டாலும், இப்பொழுது இவர்களுடைய ஆத்ம ஞானத்தின் பொருட்டு பல கோடி ஜனங்கள் பாமரத்தனத்திலும் கொடுமையிலும் பட்டினியிலும் முழுகிக்கிடக்க வேண்டுமா?

ஜட சம்பந்த நாகரீகம் (ஆடம்பரம்கூட) எளியவர்களுக்குத் தொழில் கொடுக்கும் பொருட்டு அவசியம் தான். ஆகாரம்! ஆகாரம்! இங்கு எனக்கு ஆகாரம் கொடுக்க முடியாத கடவுளால் மோக்ஷலோகத்தில் எனக்கு நித்தியானந்தத்தை கொடுக்க முடியுமென்று நான் நம்பமாட்டேன். இந்திய தேசம் முன்னேற்றத்தில் வரவேண்டும். எளியவர்கள் போஷிக்கப்பட வேண்டும் கல்வி பரப்பப்பட வேண்டும். வைதீகக்கொடுமை கூடவே கூடாது. ஜன சமூகத்தில் கொடுமை உதவாது.

அநேக சந்தர்ப்பங்களில் நமது பால்யமூடர்கள் ஆங்கிலேயரிடத்தினின்றும் அதிக அதிகாரத்தைப் பெறுவதற்கு சபைகள் கூட்டுகின்றனர். ஸ்வதந்திரத்தைதக் கொடுப்பதற்குத் தயாராயில்லாத எவனும் ஸ்வதந்திரத்திற்கு அருகனல்லன். ஆங்கிலேயர்கள் அதிகாரத்தை யெல்லாம் உங்களிடத்தில் கொடுத்து விடுகிறார்களென்று வைத்துக் கொள்ளுவோம். ஏன்? அப்பொழுது அதிகாரம் வகிப்பவர்கள் பொதுஜனங்களை அடக்கி வைத்துக்கொண்டு அவர்களுக்கு அதிகாரம் கொடுக்க மாட்டார்கள், அடிமைகள் அடிமை களையுண்டாக்குவதற்கு அதிகாரத்தை விரும்புகின்றனர்.

நேற்றைய தினம் இங்கு ஸ்திரீ ஜெயிலின் அதிகாரியாகிய எஜமானி வந்திருந்தாள். இங்கு அவர்கள் அதை ஜெயில் என்று சொல்லமாட்டார்கள். நான் அமெரிக்காவில் பார்த்ததில் இது மிகப்பெரிய விஷயம். அதனுள் வசிப்பவர்கள் எவ்வளவோ தயவுடன் நடத்தப்படுகிறார்கள். இவர்கள் எவ்வளவோ சீர்திருத்தப்பட்டு ஜன சமூகத்தின் உபயோகமான அங்கங்களாகத் திரும்பவும் அனுப்பப்படுகிறார்கள். ஆ ஆ! என்ன ஆச்சரியம்! என்ன அழகு! நீ பார்த்தாலே நம்புவாய். ஆ! இந்தியா தேசத்தில் எளியவர்கள் தாழ்ந்தவர்களைப் பற்றி நாம் என்ன நினைக்கிறோம் என்பதைப்பற்றி நினைக்க எனது இருதயம் எத்தகைய வருத்தமுற்றது. அவர்கள் (இந்திய தேசத்து ஏழைகள்) மேலேறுவதற்கு வழியில்லை; சந்தர்ப்பமில்லை. இந்தியாவில் எளியவர்கள், தாழ்ந்தவர்கள், பாவி, இவர்களுக்கு சிநேகிதர்கள் இல்லை; சகாயமில்லை; இவர்கள் எவ்வளவு முயற்சி செய்த போதிலும் மேலேழும்பமுடியாது; நாளுக்கு நாள் கீழே கீழே தாழ்ந்து போகின்றனர்; குரூர சுபாவத்தையுடைய ஒரு ஒரு ஜன சமூகம் அவர்களின் மேல் அடிமேல் அடியாக அடிப்பதை உணருகிறார்கள். ஆனால் அடி எங்கிருந்து வருகிறதென்று அவர்கள் அறியார்கள். தாங்களும் மனிதர் என்பதை அவர்கள் மறந்தேவிட்டார்கள். பயம், அடிமைத்தனம் ஆகியவைகளை சென்ற சிலவருஷங்களுக்குள் ஆலோசனாசக்திவாய்ந்த சிலஜனங்கள் அறிந்தனர். நானும் அதன் மர்மத்தை அறிந்து கொண்டேன். மதத்திடத்தில் குற்றமில்லை. உன்னுடைய மதமானது ஒவ்வொரு ஜீவராசியும் உனது ஆத்மாவின் பெருக்கமே என்று உனக்கு உபதேசிக்கின்றது. ஆனால் இருதயக்குறைவே இரக்கமின்மையே—அனுபவஞானம் இன்மையே—பண்டித மமதையே—வைதீகக்கொடுமைக்கு காரணமாகும். கடவுள் உங்களிடத்திற்கு மறுபடியும் புத்தராக வந்து எளியவர்கள், துன்புறுபவர்கள் பாவி, இவர்களுக்கு இரங்கும்படி உங்களுக்கு உபதேசித்தார்; ஆனால் நீங்கள் அவருடைய வார்த்தைக்குச் செவி சாய்க்கவில்லை; உங்களுடைய வைதீகர்களும் இரக்கமற்ற பண்டிதர்களும் பொய்க்கொள்கையினால் அசுரர்களை மயங்கச் செய்வதற்கு கடவுள் இங்கு வந்திருந்தார் என்ற பயங்கரமானகதையை கட்டிவிட்டனர்; உண்மைதான் யாமே அசுரர்கள்; நம்பினவர்களல்லர். யூதர்கள் இயேசுநாதரை மறுத்துவிட்டு அன்று முதல் எல்லோராலும் கொடுமையாக நடத்தப்பட்டு இருப்பதற்கு உலகில் இடமில்லாமல் இரந்து

சிராத்தம் செய்வதால் இறந்தவர்கள் மோகூமடைவார்களா?

(ஸ்ரீதரசுவாமியார்)

நம் நாட்டில் மதத்தின் பெயரால் நிகழும் அர்த்தமற்ற செய்கைகள் பலவற்றுள் "சிராத்தம்" செய்வதும் ஒன்று. இது இறந்துபோனவர்களின் பெயரால் செய்யப்படுகிறது. இதற்காக நாடோறும் ஏராளமான பொருள்கள் செலவழிந்து கொண்டே வருகின்றன. பொருள் சேதமடைவதுடன் நின்று விடுகிறதா? இல்லை, நம்புத்தியும் அடிமைச்சேற்றில் அழுந்தி விடுகிறது. இருப்பவர்களுக்குச்சம சுதந்திரம் வழங்க மறுப்பவர்கள் இறந்தவர்களுக்கு மோகூத்தை வாங்கிக் கொடுப்

திரிவதைப்போல, நீங்களும் உங்களை ஆட்சிசெய்யலா மென்று நினைக்கிற எந்த ஜன சமூகத்தாருக்கும் அடிமைகளாக விருக்கிறீர்கள். ஆ கொடுமையாளர்களே! ஒரு புறம் கொடுமை; மறுபுறம் அடிமைத்தனம் என்பதை நீங்கள் அறிவீர்கள். அடிமையும் கொடுமையாளனும் ஒரே அர்த்தத்தைக் குறிப்பிடுபவர்களே.

"உலகில் ஒரு மதமும் மானிடவர்க்கத்தின் பெருமையை இந்துமதத்தைப்போல் அவ்வளவு உயர்ந்தபடியில் போதிப்பதில்லை" என்று பெருமையை அனுபவிக்கப்புறப்படும்நீங்கள் "இந்து மதத்தைப்போல உலகில் ஒரு மதமும் தாழ்ந்தோர் எளியோர் இவர்களுடைய கழுத்தில் ஏறி மிதிப்பதுமில்லையே" என்பதற்கு என்ன பதில் சொல்லுகிறீர்கள்? மதத்தில் குற்றமில்லை; ஆனால் இந்துமதத்தின் போர்வையில் இரக்கமில்லாத பண்டிதர்களும் வைதிக வெளிவேஷக்காரர்களும் பாரமார்த்திகம் விவாவகாரிகம் என்ற கொள்கைகளின் வடிவமாய் கொடுமை செய்வதற்கு எல்லாவித யந்திரங்களையும் சிருஷ்டித்தனர். முகஸ்துதி, வெளிவேஷம் ஆகியவைகளையெல்லாம் விட்டு ஜன சமூகத்திற்கு ஸ்வதந்திரம் கொடுத்தால் நீங்கள் கடைத்தேறுவீர்கள். உங்களுடைய மதத்திலிருந்து வைதிகக்கொடுமையை எடுத்துவிட்டால் உலகில் உயர்ந்த மதம் உங்களுடையதே.

பேனென்று சொல்வதும், அதை நாம் நம்புவதும், நம் புத்தியின் மௌடீகத்தைப் பிறமதத்தினர்களுக்கு வியாக்யானம் செய்து காண்பித்து நம்மை நாம் பரிகாசத்துக்குப் பாத்திரர்களாகச் செய்து விடுகின்றோம். இறந்தவர்கள் எங்கேயோ மேலுலகில் வசிப்பதாகவும், அங்கு அவர்கள் வெயில், மழை பசி, தாகம், முதலானவைகளால் துன்பப்படுவார்களென்றும் உடுக்க உடையின்றி நிர்வாணிகளாய்த் திரிவார்களென்றும், அதை நிவர்த்திசெய்யக் குடை, செருப்பு, அரிசி, பருப்பு, காய்கறிதினுசுகள், நெய், தயிர்,பாயசம்,வடை, மோர்க்குழம்பு முதலானவைகளுக்கு வேண்டிய பதார்த்தங்கள், பட்டுப் பீதாம்பரங்கள், இன்னும் அநேக பொருள்கள் பார்ப்பனர்களுக்குக் கொடுக்கவேண்டுமென்றும், அதைப் பார்ப்பனர்கள் தின்று—உடுத்து—களித்து— ஏப்பம் விடும்போது அது மேலுலகில் இருப்பவர்களுக்குச் சேர்ந்துவிடுமென்றும் இறந்தவர்கள் செலவிற்கு இல்லாமல் கஷ்டப்படுவதற்கோ, அல்லது அவர்களுக்கு மோக்ஷத்தை வாங்கிக்கொடுக்கவோ விசேடமாகச்சக்தியாநுசரணம் தக்ஷிணை அதாவது இவ்வுலகம் முழுதும், அல்லது சிலதேசங்கள், சில பூமிகள், 1000, 500, 100, 10, 5, சமயம்போல் பார்ப்பனர்க்குக் கொடுக்க வேண்டுமென்றும், இத்தனையும் செய்துகொடுத்து முடிவாக நாங்கள் செய்துள்ளவகையில் ஏதாவது குற்றம் குறைகள் இருப்பின் மன்னிக்கவேண்டுமென்றும் சொல்லிப் பெண்டுபிள்ளைகள் சகிதம் அவர்கள் காலில் விழுவேண்டுமென்றும், அங்ஙனம் செய்யாதவரையில் இறந்தவர்கள் நரகத்தை அடைவதுடன் இருப்பவர்களும் நரகத்தில் விழுந்துவிடுவார்களென்றும், பார்ப்பனர்கள் சொல்வதைக்கேட்டுக் கொண்டு, நம் அறிவிற்குச் சிந்தித்துப்பார்க்கும் சுதந்திரம் கொஞ்சமும் கொடுக்காமல் சரியென்று நம்பிப்பொருளையும் கொடுத்து அவர்கள் காலில்விழுந்து அவமானப் படுகின்றோம். அந்தோ! பரிதாபம். இத்தனையும் இறந்தவர்களின் பெயரால் நடந்துவருகிறது. இதனால் இறந்தவர்கள் ஏதாவது பிரயோஜனம் அடைகின்றார்களா? நம்முன்னோர்கள் செய்தார்கள் நாமும் செய்யவேண்டுமென்ற ஒரு அபிப்பிராயத்தைத்தவிர சிரார்த்தம் என்றால் என்ன? அது யாருக்

காகச் செய்வது? அதனால் யார் என்ன பிரயோசனத்தை அடைந்தார்கள்? அடைகிறார்கள் என்று விசாரித்துப் பார்க்கின்றோமில்லை. "எண்ணித் துணிககருமம்" என்று சொல்வது போல நாம் ஒரு காரியத்தைச்செய்ய ஆரம்பிக்குமுன் அக்காரியத்தால் விளையும் நன்மை தீமைகளை நன்கு சிந்தித்துப்பார்த்த பின்பு அதில் பிரவேசிப்பதுவே தகுதியாகும். இப்பொழுது இறந்தவர்களுக்காக நாம் சிரார்த்தம் செய்துவருகின்றோம். சிரார்த்தம் செய்வதற்கு முன் இறந்தவர்களின் ஸ்திதியைப்பற்றிச் சற்று ஆராய்ந்து பார்க்கவேண்டாமா? இறந்தவர்கள் இன்ன ஸ்திதியில் இருப்பார்கள் என்று நிச்சயிக்க ஒருவராலும் முடியாதெனினும் விவகாரதிசையில் உள்ள சிலவற்றைக்களைனிப்போம்.

இறந்தவர்கள் புனர் ஜென்மம் எடுப்பார்கள் என்று சிலர் கூறுகின்றனர். இறந்தவர்கள் பிறப்பதில்லை யென்று சிலர் வாதிக்கின்றனர். இறந்தவர்கள் சூக்ஷ்ம உடலுடன் திரிசங்கு சொர்க்கம் போன்ற ஏதோ சூக்ஷ்மலோகில் வசிக்கிறார்களென்று சிலர் சொல்லுகின்றனர். இதில் முதலாவது மறுஜென்மம் உண்டென்று கூறுபவர்களின் கருத்தைக் கவனிப்போம். மக்கள் பாவம், புண்யம் மிஸ்ரம் என்ற மூன்று வித கர்மங்களை மனோ வாக்குக் காயங்களால் செய்வதால் அக்கர்மத்துக்கநுசரணமாகிய ஜென்மத்தை எடுப்பார்களென்றும், ஜென்மத்துக்குக் காரணம் கர்மமென்றும், கர்மத்திற்குக் காரணம் ஜன்மமென்றும், இந்த ஜென்மத்தில் செய்த கர்மத்தையும் அதன் பலனையும் அடுத்த ஜென்மத்தில் அனுபவிக்க வேண்டுமென்றும் கூறுகின்றார்கள் இதைச் சரியென்று ஒப்புக்கொள்வோம். ஒருவன் இறந்துபோகும் போது அவனுடைய ஆத்மா தன் திரிவித கரணங்களால் செய்துள்ள கர்மங்களுக்கேற்ற ஜென்மத்தையெடுத்து நாபாகவோ, நரியாகவோ, பன்றியாகவோ மனிதனாகவோ பிறந்து கர்மபல சேஷத்தை அனுபவிக்க வேண்டியிருக்கிறது. அவனவன் செய்த கர்மபலனை அவனவன் மறு பிறவி எடுத்து அனுபவிக்கவேண்டுமென்று ஏற்படுவதால் அதை நம்மால் நீக்கமுடியாது. மறுஜென்மமெடுத்துக் கர்மபலனை

அனுபவிப்பவனுக்கு இங்கு நாம் செய்யும் சிரார்த்தங்களி னால் என்ன நன்மை விளையப்போகின்றது? எவ்வித நன் மையும் உண்டாகாதென்று ஏற்படுகிறது. ஆகவே மறு ஜென்மம் உண்டென்று கூறுவார்களின் கருத்துக்கிசைந்து பார்க்கினும் சிரார்த்தம் செய்வதால் இறந்தவர்களுக்கு எவ் விதப் பிரயோஜனமும் உண்டாகாதென்பது உள்ளங்கை நெல் லிக்கனிபோல் விளங்குகிறது.

இரண்டாவதாக, இறந்தவர்கள் பிறப்பதில்லையென்று வாதிப்பவர்களின் கருத்தைக் கவனிப்போம்.

சரீரம் பஞ்சமஹா பூதங்களாலானது. பஞ்சபூதங்க ளால் ஆக்கப்பட்ட தேகத்துடன் கூடியிருக்கும் மனிதன் உச்சுவாஸ நிச்சுவாஸங்கள் செய்யஇயலாத காலங்களில், மர ணம் சம்பவிக்கின்றதென்றும், மரணமடையும்போது பஞ்ச பூதங்களும் மண் மண்ணுடனுடனும், ஜலம் ஜலத்துடனும், அக்கினி அக்கினியுடனும், வாயு வாயுவுடனும், ஆகாசம் ஆகா சத்துடனும், கலந்து அதனதன் சூக்ஷுமசக்தியில் சேர்ந்துவிடு கின்றதென்றும், ஜனனமென்பது கம்புத்திரர்கள் ஜனிப் பிப்பதுதான் என்றும், கம் ஜென்மம் இங்கேயே முடிந்து விடுகின்றதென்றும் கூறுகின்றார்கள். இதுவும் சரியென்று ஒப்புக்கொள்வோம். ஒருவன் இறந்துபோகும்போது பஞ்ச பூதங்களும் அதனதன் சூக்ஷுமசக்தியில் கலந்துகொள்ளுகின் றமையால் மீதி ஒன்றும் இல்லையென்று ஏற்படுகிறது. ஆகவே, இறந்துவர்கள் பிறப்பதில்லையென்று கூறுவார்க ளின் கருத்திற்கிசைந்து நோக்கினும், சிரார்த்தம் செய்வ தால் இறந்தவர்களுக்கு எவ்வித நன்மையும் உண்டாவ தில்லையென்பது வெள்ளிடைமலை.

மூன்றாவதாக சூக்குமஉலகில் சூக்குமஉடலுடன் வசிக் கிறார்கள் என்று கூறுவோர்களின் கூற்றைக் கவனிப்போம்.

ஒருவன் மரணமடையும்போது அவனுடைய தூலதேகம் தான் அழிந்துவிடுகிறதென்றும், மற்றும் சூக்ஷும காரண சரீரங்கள் அழிவதில்லையென்றும், தூலதேகம் அழிவ

தைப் பார்த்து அவனுடைய எல்லாக்காரியங்களும் முடிந்து விட்டதென்று கருதுவது தவறென்றும், சூக்ஷமதேகம் என்றும் அழிவதில்லை யென்றும், சூக்ஷமதேகம் சூக்ஷம உலகில் தங்கியிருக்கும் மென்றும் கூறுகின்றார்கள். இதையும் சரியென்று ஒப்புக் கொள்வோம்.

நாம் தூலஉலகில், தூல உடலுடன் தூல உணவுகளை உண்டு வாழ்கின்றோம். சூக்ஷம உலகில் சூக்ஷம உடலுடன் வசிப்பவர்களுக்கு, சூக்ஷம உணவுகள் தான் வேண்டற்பாலது. எனெனில், தூலதேகிகளின் தூல உணவுகள், சூக்ஷம தேகிகளுக்குப் பொருந்தாது. தூல உணவுகளை ஜீரணிக்கச்செய்யும் ஜீரணக்கருவிகளும், பல், நாக்கு, குடல்கள், முதலானவைகளும் சூக்ஷம தேகிகளுக்கில்லை. தூல உலகிலிருப்பவர்களுக்கு தூல ஆஹாராதிகளை ஸ்ருஷ்டித்த கடவுள் சூக்ஷம உலகிலிருப்பவர்களுக்குச் சூக்ஷம ஆஹாராதிகளை ஸ்ருஷ்டித் திருப்பாரன்றோ? உலகின் தன்மைக்கேற்ற ஆஹாரப் பொருள்களை ஸ்ருஷ்டித்து அங்குள்ளவர்களை ரக்ஷிக்கவேண்டிய வேலை கடவுளைச் சேர்ந்ததல்லவா? நம்மால் கூடுமானதை நாம் செய்வோமென்று நிச்சயித்தாலும் சூக்ஷம உலகில் வசிப்பவர்களுக்கு இங்கிருந்து ஆஹாரம் அனுப்புவதெங்ஙனம்? சூக்ஷம உலகில் இருப்பவர்கள் யாராவது வந்து பரியாயிருக்கிறதென்று, நம்மை இதுகால பரியந்தம் கேட்டிருக்கிறார்களா? பார்ப்பனர்களின் வயிறு தான் சூக்ஷம உலகம் போலும்! ஆகவே, சூக்ஷம உலகில் இருப்பார்கள் என்று கூறுவோர்களின் கருத்திற்கிசைந்து பார்த்தாலும், சிரார்த்த பலன் சூக்ஷம உலகிற்குச் செல்லாதென்றும் அதனால் இறந்தவர்களுக்கு எவ்விதநன்மையும் உண்டாவதில்லை யென்றும ஏற்படுகிறது.

இறந்தவர்கள் சொர்ப்பனத்தில் வந்து அனேக விஷயங்களைப் பேசுகிறார்களென்றும், அவர்கள் எங்காவது இல்லாமலிருந்தால் சொர்ப்பனத்தில் சந்திக்க நியாயமில்லை யென்றும் கூறுவாருமுண்டு. அது மனோவிகற்பமே யன்றி வேறல்ல. இறந்தவர்கள் மட்டுமல்ல, இருப்பவர்களும், சொர்ப்பனத்தில் வருகிறார்கள். எந்த வஸ்துவைப்பார்த்தாலும் உடனே போட்டோ பிடித்துத் தன்னகத்தே பிரதி பலிக்கச் செய்யும் சக்தி மனதிற்கு உண்டு. ஜாக்கிராவஸ்தையில் (நினைவு நிலை) மனது எந்த வஸ்துக்களைப் பார்க்கின்றதோ, அதை சொர்ப்பனத்தில் பிரதிபலிக்கச் செய்கிறது.

இறந்தவர்கள் உயிருடன் இருக்கும்போது அவர்களின் உருவங்களைப் பல தடவை பார்த்தும், பழகியும் இருப்பதினால் அவ்வுருவங்களை மனது போட்டோ பிடித்துச் சொப்பனத்தில் தோன்றச் செய்கின்றதே யன்றி வேறில்லை. ஆகையால் எந்த வகையில் பார்த்தாலும் இறந்தவர்களுக்காக நாம் செய்யும் சிரார்த்தங்களால் எவ்வித பலனும் விளைவதில்லை யென்று ஏற்படுகிறது. சிரார்த்தத்தில் வைத்துள்ள எல்லாப் பொருள்களையும் மூட்டை கட்டிக்கொண்டு போவது பார்ப்பனர்களல்லவா? அதன் பிரயோஜனத்தை அடைவதும் அவர்தானே யன்றி வேறு யாருமல்லவென்பது வெளிப்படை. என்னே மூடக்கொள்கை! மூடக்கொள்கை!! பார்ப்பனர்களுக்கு வரும் கஷ்ட நஷ்டங்களை நீக்கவே அவர்களால் முடியாமலிருக்கிறது. இந்த லக்ஷணத்தில் இறந்துபோன நம் பெரியோர்களுக்கு மோக்ஷம் வாங்கித் தருகிறேனென்று சொல்வதும், அதை நாம் நம்புவதும் மூடத்தனமே யன்றி வேறென்ன? நீண்ட நாட்களாகவே சிரார்த்தம் செய்து வருகின்றோம். அதன் பலனை இறந்தவர்கள் எற்றுக்கொண்டதாக, இதுகால பரியந்தம் எவ்வித அத்தாக்ஷிகளும் நமக்குக் கிடைக்கவில்லையே? இது ஒன்றே நாம் செய்யும் மூடச்சடங்குகள் பலனற்றதென்று நிரூபிக்கப்போதுமானது. எனவே, நம் பெற்றோர்கள் இருக்கும்போது அவர்கள் குறைகளைக் கவனியாமல், தடியும் கையுமாயிருந்து, இறந்துபோன பிறகு அவர்களைத் திருப்தி செய்யப்புறப்படுவது, கண்ணிருக்கும்போது சூரிய நமஸ்காரம் செய்யாமல், இரண்டு கண்களும் இருண்டுபோன பின்பு, சூரியனை விழுந்து விழுந்து கும்பிட்டவன் கதைக்கு ஒப்பாகும்.

இறந்தவர்களின் தினத்தை ஞாபகார்த்தமாகக் கொண்டாட வேண்டுமென்பதொன்று. இது சரியென்றாலும் இதற்காக, வக்கீல்களோ, தரகர்களோ, அவசியமில்லை. இறந்தவர்களுக்கு மோக்ஷமோ, நரகமோ, கொடுக்க வேண்டிய வேலை கடவுளைச் சேர்ந்தது. ஆகையால் அன்றைய தினம்தம் பிதுர்க்களுக்கு ஆத்மசாந்தி உண்டாகவேண்டுமென்று சக்தியானுசாரம் ஏழைகளுக்கு அன்னதானம் செய்து ஷை காரியத்தை ஞாபகார்த்தமாக நடத்திக்கொள்வதுதான் ஞாயமான முறையாகும்.

முக்கிய கவனிப்பு.

"குடி அரசு" (வாரப்பதிப்பு)

"பகுத்தறிவு" (மாதப்பதிப்பு)

அரசியல் புரட்டு,
மத இயல் புரட்டு,
பொருளியல் புரட்டு,
சமுதாய இயல் புரட்டு,
தேசிய இயல் புரட்டு

முதலாகிய பல புரட்டுகளையும், அவற்றைத் தங்கள் சுயநலங்களுக்குப் பயன்படுத்திக் கொண்டு மக்களை ஏமாற்றி வாழும் பல "தலைவர்கள்", மதாச்சாரியார்கள், மடாதிபதிகள், சீர்திருத்தக்காரர்கள், தேசபக்தர்கள், அரசாங்கத்தார் என்பவர்களின் யோக்கியதைகளையும் பச்சையாய் வெளியாக்கி மக்களுக்கு தைரியமாய் உண்மையை எடுத்துக்கூறும் புரட்சிப் பத்திரிகைகள் தென்னாட்டில் ஏன்? இந்தியாவிலேயே இவற்றைத்தவிர வேறு கிடையாது என்று சொல்லலாம்

குடி அரசுக்கு வருட சந்தா ரூ. 3-0-0
பகுத்தறிவுக்கு ,, ரூ. 1-0-0
இரண்டு பத்திரிகைக்கும் சேர்த்து
வருட சந்தா ரூ 3—8—0

விலாசம்:—மானேஜர்,

குடி அரசு ஆபீஸ், ஈரோடு

பகுத்தறிவு வெளியீடுகள்.

—)=—

தோழர் ஈ. வெ. ரா. எழுதியவை.

பெண் ஏன் அடிமையானாள்? ...	...	ரூ.	0 5 0
பிரகிருதிவாதம் ...	...	,,	0 3 0

அறிஞர் சார்ல்ஸ் T கோர்ஹாம் எழுதியது.

முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை ...		,,	0 5 0

Hon. பேர்ட்டிரண்ட் ரசல் எழுதியவை.

நான் ஏன் கிறிஸ்தவனல்ல? ...	...	,,	0 3 0
மதம் மக்களுக்குச் செய்த நன்மையென்ன? ...		,,	0 3 0

அறிஞர் இங்கர்சால் எழுதியவை.

மதம் என்றால் என்ன? ...	...	,,	0 3 0
கடவுள் ...	...	,,	0 5 0
நான் சமூகவாதியானதேன்? ...	...	,,	0 3 0
வால்டேர் ...	...	,,	0 4 0
பேய்-பூதம்-பிசாசு ...	...	,,	0 3 0

அறிஞர் பிரமச்சாரி M. A., L. T., எழுதியவை.

மதமும் விஞ்ஞானமும் ...	...	,,	0 3 0
பிரபஞ்ச உற்பத்தி ...	...	,,	0 3 0

அறிஞர் ஜோஸப் மெக்கேபி எழுதியது.

மதப்புரட்சி ...	...	,,	0 4 0

தோழர் M. சிங்காரவேலு B. A., B. L., எழுதியவை.

மெய்ஞ்ஞான முறையும் மூடநம்பிக்கையும்	1-ம் பாகம்		0 6 0
,,	2-ம் பாகம்		0 5 0

அறிஞர் ஜீன் மெஸ்லியர் எழுதியவை.

பகுத்தறிவு or கத்தோலிக்க குருவின் மரணசாசனம்			0 4 0
,,	2-ம் பாகம்		0 4 0

தோழர் அ. இராகவன் எழுதியது.

பெண்ணுரிமையும் மதமும் ...	...	,,	0 3 0

அறிஞர் சிவானந்த சரஸ்வதி எழுதியது.

ஞானசூரியன் ("நான்காம் பதிப்பு") ...		,,	0 5 0
,, காலிக்கோ பயிண்டு ...		,,	0 8 0
மரணத்திற்குப் பின் ஜீவனுண்டா? (ல. ப. நூ. பி.)			0 4 0

கிடைக்குமிடம்:—

குடி அரசு பதிப்பகம், ஈரோடு.

குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

1.	இந்தியாவின் குறைபாடுகள் (160 பக்கம்)	0	8	0
2.	லெனினும், மதமும்	0	4	0
3.	பொதுவுடமைத் தத்துவங்கள்	0	3	0
4.	கடவுளும், பிரபஞ்சமும்	0	4	0
5.	உழைப்பாளிகளுக்குஏன் இவ்வுலகமில்லை	0	1	0
6.	இராமாயண ஆராய்ச்சி பாலகாண்டம்	0	4	0
7.	,, அயோத்தியாகாண்டம் (200 பக்கம்)	0	8	0
8.	,, ஆரண்ய காண்டம்	0	4	0
9.	,, கிட்கிந்தா காண்டம்	0	4	0
10.	ஞானசூரியன் (ஈன்காம்பதிப்பு) 200பக்கம்	0	5	0
11.	தர்ம பரீக்ஷை அல்லது புராண ஆபாசம்	0	3	0
12.	மேயோ கூற்று மெய்யா? பொய்யா?	0	3	0
13.	பங்கஜம் அல்லது பார்ப்பனக் கொடுமை	0	4	0
14.	ஈ. வெ. ரா. சீர்திருத்த மகாநாட்டு உபன்யாசம்	0	2	0
15.	அகத்தியர் ஆராய்ச்சி	0	2	0
16.	இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு	0	2	0
17.	சுயமரியாதைப் பாடல்	0	2	0
18	சுதர் மூடநம்பிக்கை (இங்கிலீஷ்)	0	2	0
19.	பர்னார்ட்ஷா உபன்யாசம்	0	1	0
20.	சோஷியலிசம்	0	2	0
21.	போல்ஷ்விக் முறை	0	1	0
22.	ஈ. வெ.ரா இலங்கை உபன்யாசம்	0	0	9
23.	சமதர்ம உபன்யாசம்	0	0	6
24.	சோதிடஆராய்ச்சி	0	4	0
25.	மனுநீதி விளக்கம்	0	2	0
26.	மறுப்புக்கு மறுப்பு	0	3	0
27.	பாரத ஆராய்ச்சி (ஆதிபருவம்)	0	4	0
28.	புது ரஷ்யா (200 பக்கம்)	0	8	0
29.	புராண ஆராய்ச்சி தக்க ஆதாரங்களுடன்	0	8	0
30.	கர்ப்ப ஆட்சி	0	6	0
31.	ராவணப் பெரியார்	0	5	0
32.	இங்கர்சால் பொன்மொழிகள்	0	4	0
33.	நரகம் எங்கே?	0	2	0
34.	ஜாதியை ஒழிக்க வழி	0	4	0
35.	கலைக்கியானம் அல்லது கைவல்யம்கட்டுரை	0	5	0

கிடைக்குமிடம்:— குடி அரசு பதிப்பகம், ஈரோடு.

Edited Printed and Published by E. V. Krishnasamy at the Unmai vilakam Press, Erode.